# மே 5திற்குப்பின் வடகிழக்கு ஆசிரிய இடமாற்றம்

வடக்கு - கிழக்கு மாகாணங்களிலுள்ள ஆசிரியர்களுக்கான இடமாற்றங்கள் எதிர்வரும் மே மாதம் 5 ஆம் திகதிக்குப் பின்னரே அமுல்படுத்தப்பட இருப்பதாக தெரியவருகின்றது. இவ்விடயம் சம்பந்தமான ஆசிரிய இடமாற்றசபைக் கூட்டம் ஒன்று எதிர்வரும் மே மாதம் 5 ஆம் திகதி வடக்கு கிழக்கு மாகாண அமைச்சில் நடைபெறவுள்ளது. இக் கூட்டத்திற்கு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் திரு. த, மகாசிவம் உட்பட மாவட்ட ரீதியாக தெரிவுசெய்யப்பட்ட இடமாற்றுச் சபை அங்கத்தவர்களும் கலந்து கொள்கின்றார்கள் மாவட்டரீதியாக தெரியசெய்யப்பட்ட பிரதிநிதிகளின் விபரம் வருமாறு, திருவாளர்கள் த. பஞ்சலிங்கம் யாழ்ப்பாணம், வி. த. குமாரசாமி மட்டக்களப்பு, எஸ். தண்டாயுதபாணி திருகோணமலை எஸ். சிவானந்தநாயகம் அம்பாறை, மு. பாலசுப்பிரமணியம் வவுனியா,

—8 ஆம் பக்கம் பார்க்க

பக்கங்கள் எட்டு விலை ரூபா: 3-00

# முரசொலி

மலர் 04 இதழ் 84 திங்கள் 30-04-1980 (சித்திரை 16) ஷவ்வால் 04

# தமிழீழ மீனவரின் வலைகள் அறுப்பு

## மீன் களவு தொடர்கிறது - விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி

### தமிழ்நாட்டு மீனவர் தமிழீழ மீனவரின் நிலைமையை புரிந்து கொள்ளவேண்டும்

**தமிழ்நாட்டு மீனவர்கள் தமிழீழ எல்லைக்குள் வந்து இங்குள்ள மீனவர்களின் வலையை அறுததுச் செலகின்றார்கள். மீன்களைக் களவாடிச் செலகின்றார்கள். என்று விடுதலைப் புலிகள் மககள் முன்னணியின் தலைமைச் செயலகம் தெரிவித்துள்ளது.**

தமிழ்நாட்டு மீனவர்கள் தமிழீழ மீனவர்களின் நிலைமையைப் புரிந்து கொள்ள வேண்டும் என்ற தலைப்பில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைமைச் செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் மேற்படி தெரிவிக்கப் பட்டுள்ளது

தமிழ் நாட்டு மீனவர்கள் தமிழீழ எல்லைக்குள் வந்து இங்குள்ள மீனவர்களின் மீன் வலையை அறுத்துச் செல்கின்றார்கள் மீன்களை களவாடிச் செல்கின்றார்கள்.

பல முறை நாம் இம் மீனவர்களை அழைத்து இங்

→ 8 ஆம் பக்கம் பார்க்க

## 3 வருடம் பதில் அதிபராக சேவை புரிந்தோர் நிரந்தரமாவார்

31.12.1989 அன்றுவரை மூன்று வருடங்கள் தொடர்ச்சியாக பதில் அதிபர் சேவையில் இருந்தவர்கள் அப்பதவியில் நிரந்தரமாக்கப்படுவார்கள்.

இவ்வாறு கல்விச் சேவைக் குழுத்தலைவர் திரு.ஜோர்ஜ் மெண்டிஸ் அவர்கள இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளரிடம் தெரிவித்துள்ளார்.

இப்பதவிகள் பாடசாலையின் தராதரத்திற்கு ஏற்பவே அமையும் எனவும் குறிப்பிட்டுள்ளார் (43)

## உல்லாச பயணிகள் வருகை மாதாந்தமாக அதிகரிப்பு

இலங்கைக்கு வரும் உல்லாசப் பயணிகளின் தெகை தற்போது அதிகரித்து வருகின்றது. இந்த வருடத்தின் முதல் 3 மாத காலத்தில் மட்டும் 79,906 உல்லாசப் பயணிகள் வந்துள்ளனர் இதே வேளை எயர் லங்கா விமான சேவையும் அதன் சேவையை 74 சத வீதத்தால் அதிகரித்துள்ளது.

கடத்த வருடம் முதல் மூன்று மாதத்தில் 14.754 உல்லாசப் பயணிகளைக் கொண்டு வந்த எயர் லங்கா இந்த வருடத்தின் முதல் மூன்று மாத காலப் பகுதி

→ 8 ஆம் பக்கம் பார்க்க

## யாழ். பல்கலைக்கழக விவசாயபீட கட்டட வேலைகள் தாமதம்

யாழ்.பல்கலைக் கழகத்தின் விவசாயபீடம் கிளிநொச்சியில் அமைப்பது தொடர்பான திட்டம் 1982 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட போதும் அண்மைக்காலமாகவே இத்திட்டத்திற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன,

பல்கலைக்கழக மானியக் குழுவின் வேண்டுகோளுக்கு இணங்க 1986 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திலேயே இப்பீடம் நிறுவுவதற்கான கட்டடம், உபகரணம், ஆளணி ஆகிய தேவைகளுக்கான செலவு மதிப்பீடு அனுப்பி வைக்கப்பட்டது,

இவ்வாண்டில் இருந்தே

8 ஆம் பககம் பார்க்க

## ரயில் எஞ்சினகள் பற்றாக்குறை வடபகுதி ரயில் சேவை பாதிப்பு

வடபகுதிக்கு விசேட ரயில் சேவையை நடாத்துவதற்கு ரயில் எஞ்சின் பற்றாக்குறையே காரணமென தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கான எஞ்சின்களை இறக்குமதி செய்வதற்கான நடவடிக்கையை ரயில்வே திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

எஞ்சின்கள் இங்கு வந்து சேர்ந்ததும் வடபகுதிக்கு விசேட ரயில்சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது. (03)

## வலிகாமம் பிரிவு மேதினஊர்வலம்

வலிகாமம் விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணி நடாத்தும் மேதின ஊர்வலம் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் இருந்து பிற்பகல் இரண்டு மணிக்கு ஆரம்பமாகும் ஊர்வலம் தெல்லிப்

→8 ஆம் பக்கம் பார்க்க்

## 15வீத குழந்தைகள் வடக்கில் நிறை குறைவாகவே பிறப்பு

வட பகுதியில் பிறக்கும் 15 சதவீதமான குழந்தைகள் நிறை குறைவாகவே பிறப்பதாக வைத்திய ஆய்வுகளிலிருந்து தெரிய வந்துள்ளது. ஒரு சாதாரண குழந்தை 2.6 கிலோகிராம் நிறையுடையதாக பிறக்க வேண்டும். இரு குழந்தைகளுக்கிடையே மூன்று வருட இடைவெளி இல்லாத காரணத்தினாலேயே மேற்படி நிலை தோன்றியுள்ளதாக அவ் ஆய்வுகளில் இருந்து மேலும் தெரியவந்துள்ளது. (03)

## 75 அதிபர்பதவிவெற்றிடத்திற்கு வடகிழக்கில் 80 பேர் தெரிவு

அண்மையில் கொழும்பில் நடைபெற்ற அதிபர் தரம் I இற்கு வடக்குக் கிழக்கில் இருந்து சுமார் 80 பேர் அழைக்கப்பட்டதாக தெரிய வருகிறது. ஆனால் பதவி வெற்றிடங்கள் சுமார் 75 என்பது குறிப்பிடத்தக்கது.

அதிபர் தரம் II இற்கு சுமார் 400 பேர் அழைக்கப்பட்டதாக தெரியவடுகிறது, ஆனால் பதவி வெற்றிடங்கள் சுமார் 225 என்பது குறிப்பிடத்தக்கது (43)

## உணவு முத்திரைக்கு பொருட்கள் பெறும் காலஎல்லை நீடிக்கப்படும்

யாழ்மாவட்டத்தில் உணவு முத்திரைவிநியோகம் முடிவடையாத காரணத்தினால் உணவுமுத்திரைக்கு உணவு பெறும் இம்மாத காலஎல்லை அடுத்த மாதம் வரை நீடிக்கப்படலாம் என தெரியவருகின்றது.

இவ்வுணவு முத்திரை விநியோகம் இம்மாதமத்தியில் முடிவடைந்து இம் மாத இறு

→ 8 ஆம் பக்கம் பார்க்க

## ஜன. தொழி. காங்கிரஸ்தலைவர் அப்துல அஸீஸ் காலமானார்


ஜனநாயகதொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஜனாப் அப்துல் அஸிஸ் (78) நேற்று காலமானார்.

ஜெனீவாவில் நடைபெற்ற சர்வதேச தொழில்தாபன மாநாட்டில் இலங்கைப் பிரதிநிதியாக முதன் முதலில் இவர் கலந்து கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது,

## திரையரங்குகளில் ஆபாச சுவரொட்டிகள் கிழிப்பு

யாழ்நகரின் திரையரங்குகளில் ஒட்டப்பட்டிருந்த ஆபாச போஸ்டர்கள் யாவும் அகற்றப்பட்டுள்ளன.

இது வரைகாலமும் தமிழ்ப் படங்களுக்கும் ஆபாசபோஸ்டர்கள் திரையரங்குகளில் தாராளமாகஒட்டப்பட்டது. 3



**கிழக்கின் எல்லைப் பகுதியில் வாழும் தமிழ் மக்களின் இன்றைய நிலை என்ன?**

நேரடி விசிட் 7-ம் பக்கத்தில்

# இன்று நாள் எப்படி?

மேடம்: புதுத் தொழில், வாகன சுகம், வணிகர்கள் கடற்றொழில், செய்வோர் இலாபம், திடீர்ப் பிரயாணம்.

இடபம்: பணவரவு, மனையிற் சுபகாரியம், காதலர் மகிழ்ச்சி, விவாக நிட்சயம், மாமன் வழிசுகம்.

மிதுனம்: திடீர்ப் பிரயாணம், பொருள் நஷ்டம், பெரியோர் பகை, தேடியவர் வருகை.

கடகம்: இளைய சகோதரருதவி, மனக்கிலேசம், கல்வியாற் தொழில், விவாகத் தடை.

சிங்கம்: தேடியவர் வருகை, புகழ்தேடி வரும், கலைஞர்கள் கௌரவிக்கப்படல், திடீர்ப் பிரயாணம்.

க்ன்னி: சுகஜீவியம், திடீர்ப் பிரயாணம், தூரதேசம் போனவர்கள் வருகை, புதுத் தொழில்.

துலாம்: காதலர் மகிழ்ச்சி, வாகன மாற்றம், கடற்றொழில் இயந்திரத்தொழில் இலாபம்.

விருச்சிகம்: பிதா வழி சுகம், பெரியோராசி, வாக்குப் பலிதம், தேடியவர் வருகை, விவாக நிட்ஷயம்.

தனுசு: தேடியவர் வருகை, வாகன சுகம், வணிகர்கள் கடற்தொழில் இயந்திரத் தொழில் இலாபம்.

மகரம்: தேடியவர் வருகை, வாக்குச் சுகம், வணிகர்கள் கடற்றொழில் மூலம் இலாபம்.

கும்பம்: சுக ஜீவியம், வாகன சுகம், வணிகர்கள் கடற்றொழில் செய்வோர் இலாபம், புதுத்றொழில்.

மீனம்: உயர் பதவி, வாகன சுகம், வணிகர்கள் கடற்றொழில் இயந்திரத்தொழில் மூலம் இலாபம், தேடியவர் வருகை.

யாழ். சோதிடர்
ச. அரியநாயகம்

# மன்னார்-சங்குப்பிட்டிக்கு மேலதிக பஸ்சேவை தேவை

மன்னார் யாழ்ப்பாணம் நேரடி பஸ்சேவை தற்போது நடைபெற்றுவருகிறது ஆனால் பிறிதொரு மன்னார் சங்குப்பிட்டி பஸ்சேவை ஒன்றும் நடைபெற வேண்டுமெனப் பிரயாணிகள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

மன்னார் பஸ் நிலையத்திலேயே யாழ்ப்பாணம் செல்லும் பயணிகள் நிரம்பி வழிந்து விடுகின்றனர். இதனால் இடை வழியில் நின்று பஸ் எடுக்கும் பிரயாணிகள் பெருங்கஷ்டத்துடன் பயணம் செய்ய வேண்டி ஏற்படுகிறது. திருக்கேதீஸ்வரம், விடத்தல் தீவு, இலுப்பைக்கடவை, வெள்ளாங்குளம், முழங்காவில், பல்லவராயன்கட்டு, பூநகரி, சங்குப்பிட்டி செல்லும் பிரயாணிகளும் இதே பஸ்களில் பிரயாணத்தை மேற்கொள்வதால் பெரும் இடநெருக்கடி ஏற்படுகிறது.

அநேக பிரயாணிகள் கால் கடுக்க யாழ்ப்பாணம் வரை நின்றுகொண்டு பயணம் செய்யவேண்டி உள்ளது. மன்னாரில் கடமையாற்றும் அரச ஊழியர்களும் இடிபட்டு நெரிபட்டு பயணத்தை மேற்கொள்கிறார்கள். சங்குப்பிட்டி வரை பிறிதொரு பஸ் சேவை நடைபெற்றால் வடமராட்சி, தென்மராட்சிப் பிரயாணிகளுக்கும் இதுவசதியாக அமையும். இப்பகுதிப் பிரயாணிகள் நேரடி பஸ் சேவையில் பல கஷ்டங்களை அநுபவிக்கிறார்கள். சங்குப்பிட்டிக்கு வரும் இப்பயணிகள் பஸ்களில் தொங்கிக்கொண்டு பயணம் செய்கிறார்கள். எனவே மன்னார்சங்குப்பிட்டி பஸ்சேவை அவசியமாகும் என இப்பகுதி அமைப்புக்கள் வலியுறுத்தியுள்ளன. (17

# வீதி திருத்த நிதி உண்டு; கல் இல்லை

புதுக்காடு - தாழையடி வீதி செப்பனிடுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள போதிலும் கற்கள் பெறுவதில் ஏற்படும் தாமதத்தினால் திருத்தவேலை தொடங்காமல் இருப்பதாக பொறியியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இவ் வீதியினூடாக பஸ் சேவை நடாத்த முடியாத நிலைமை ஏற்படலாம் என வ. பி. போ. சபை உயரதிகாரிகள் குறிப்பிட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இவ்வீதி வழியாகவே யாழ்-ஆழியவளை பஸ்சேவை நடாத்தப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. (43)

# கதாப்பிரசங்கம்

(வல்வெட்டித்துறை)

வல்வெட்டித்துறை முத்துமாரிஅம்மன் கேவிலில் 29ம்திகதி ஞாயிற்று கிழமையும் 30ம் திகதி திங்கட்கிழமையும் இரு நாட்களுக்கு மாலையில் திரு. இரா. சிவஅன்பு (சொற்செல்வன் ) அவர்களால் நந்தனார் என்னும் விடயம் பற்றியும் வேறு இராமாயண விடயங்கள் பறறியும் கதாப்பிரசங்கம் செய்யப்படவுள்ளது.

இரவு அம்பாள் மின் அலங்காரங்களுடன் விநாயகர் முருகன் சமேதராக வீதிவலம் வருவார். இதைத்தொடர்ந்து 9ம்திகதி தேர் உற்சவமும் தீர்த்தோற்சவமும் இடம் பெறும்.

# ஒருநாள் கோழிககுஞ்சு விநியோகம் மீண்டும் ஆரம்பம்

(சங்கானை)

சங்கானைகால்நடை வைத்திய அதிகாரி அலுவலகத்தில் ஒரு நாள் கோழிக்குஞ்சு விநியோகம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

குண்டசாலையிலுள்ள கோழிப் பண்ணையிலிந்தும், மாரவல பண்ணையிலிருந்தும் உற்பத்தி டுசய்யப்பட்ட ஒரு நாள் கோழிக் குஞ்சுகளைச் சங்கானைக் கால்நடை வைத்திய அதிகாரியின் சண்டிலிப்பாயிலுள்ள அலுவலகத்தில் தேவையானோர் முன் கூட்டியே தங்கள் பெயர்களைப் பதிவு செய்து பெற்றுக் கொள்ளமுடியும் என்று தெரிவிக்கப்படுகிறது. (1ச)

# மாநகர வீதிகள் திருத்தப்படும்

யாழ் மாநகரசபை எல்லைக்குள் வீதிகள் புனரமைப்புத்திட்டத்தின் கீழ் பதினொரு வீதிகள் விரைவில் புனரமைப்பு செய்யப்படவுள்ளன.

மணிக்கூட்டு வீதி, கன்னாதிட்டி வீதி, நாவலர் வீதி, பிறவுண் வீதி, சேர் பொன்னம்பலம் இராமநாதர் வீதி, கனகரட்னம் வீதி, சிவன் வடக்கு வீதி, கல்லூரி வீதி, அம்பலவாணர் வீதி, நாயன் மார்கட்டு வீதி, நெடுங்குளம் வீதி, ஆகியவைகளே திருத்தப்படவுள்ளன. (03)

## கிளிநொச்சி நகர் பகுதியில்

# கட்டாக்காலி மாடுகளை கட்டுப்படுத்த நடவடிக்கை

கிளிநொச்சி நகர் மத்திய சந்தைக்குள்புகுந்து கட்டாக்காலி மாடுகள் மரக்கறிகளையும் வேறு பொருட்களையும் சேதம் விளைவித்து வருகின்றன இதனைத் தொடர்ந்து இதற்கென மாட்டுக்காளை அமைக்கப்பட்டு கட்டாக்காலி மாடுகளைப் பிடித்து, சேதத்துக்காசு மாடு ஒன்றுக்கு 100 ரூபா வீதம், தண்டம் அறவிடப் பட்டுவருகிறது.

இரவு வேளைகளில் நகரில் கட்டாக்காலிகளாகத் திரியும் மாடுகள் சந்தைக்குள்ளும் பஸ் நிலையத்தில் புகுந்து அழிவு செய்வதைத் தொடர்ந்தே இன்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது, (ε5)

# நஷ்டத்தில் இயங்கும் கூட்டுத்தாபனங்கள் மூடப்படும்

நஷ்டத்தில்இயங்கிவருவதாலும், போதிய உற்பத்தியின்மையாலும் சில கூட்டுத் தாபனங்களையும், அரசநிறுவனங்களையும் தனியாரிடம் ஒப்படைக்க அரசு கொள்கையளவில் தீர்மானித்துள்ளது.

எனினும், இக் கூட்டுத்தாபனங்கள் தனியாரிடம் ஒப்படைக்கப்பட்டாலும் ஊழியர்களின் தொழிலுக்கு உத்தரவாதம் அளிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மணக்காட்டு சுடலைவீதிசேதம்

புங்குடுதீவு மணக்காட்டு சுடலைக்கு செல்லும் கடற்கரை வீதிகள் கடந்த பல வருடங்களுக்கு மேலாக செப்பனிடப்படாமல் பெரும்குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது.(20)

# அலுவலகர் வசதிக்காக வவுனியா- யாழ். விசேடபஸ்

வவுனியாவில் கடமையாற்றும் அரச அலுவலகர்கள் யாழ். நகர் செல்வதற்கு ஏதுவாக பிரதி வெள்ளிக்கிழமையும் வவுனியாவில் இருந்து பிற்பகல் மூன்று மணிக்கு இ.போ. ச. பஸ் சேவை ஒன்று யாழ் நகர் செல்லவிருக்கின்றது.

ஏற்கனவே தினசரி பஸ்பகல் இரண்டு மணிக்குப் புறப்படும் பஸ் வவுனியாவை இரவு ஏழு மணிக்கு வந்தடைகிறது.

# புங்குடுதீவுபகுதியில் தண்ணீர் கேட்டால் அது எங்கும் இல்லை

புங்குடுதீவுப் பகுதியில கடந்த சில நாட்களாக தண்ணீருக்கு ஏறபட்டு வந்துள்ள தட்டுப்பாட்டால் இங்குள்ள தேநீர்ச் சாலைகளிற தண்ணீரைக் கேட்டால் இல்லையெனக் கூறுசின்றார்கள்.

அது மட்டுமல்லாமல்வைத்திய சாலைகளில் தங்கியிருந்து சிகிசிகிச்சை பெறும் நோயாளர்களும் இப்பகுதி தேநீர்க் கடைகளில் சுடுநீர் கேட்டாலும் இல்லையென்றே கூறுகின்றார்கள்,

இந்நிலையினால் அப்பகுதியிலுள்ளவர்கள் பெரும் துன்பமடைந்து வருகின்றார்கள் (20)


வெளிநாட்டு வேலைவாய்ப்பு

LEO MANPOWER

லியோ மான்பவர்

மாலைதீவில் வேலை செய்வதற்கு கூலி ஆட்கள் உடனடியாகத் தேவை.

எதிர்வரும் 12ஆம் தேதி விசா பதிவு செய்வதற்காக பாஸ்ப்போட், பாஸ்ப்போட் புகைப்படம் 6 இவைகளுடன் கீழ்க்கண்ட விலாசத்திற்கு நேரில் வரவும்.

விபரங்களுக்கு:
மு. நவரத்தினம்
X. P. சௌந்தரநாயகம்

LEO MANPOWER
171/3. Galle Road
Bambalapitiya COLOMBO 4
T. P. 502162
LABOUR L, No. 617

04268


# ஸ்ரீதேவி மகத்துவம் தொடர்பிரசங்கம்

திருநெல்வேலி அரசடி அருள்மிகு சிறீ சிவகாம சுந்தரீ அம்பாள் ஆலய வருடாந்தத் திருவிழா இன்று 30 ம் திகதி திங்கள் ஆரம்பமாகி தொடர்ந்து 15நாட்கள் வெகு விமரிசையாக நடைபெற ஏற்பாடாகி உள்ளது இந் நாட்களில் சிறப்பு நிகழ்ச்சியாக தினமும் இரவு 8- 45 மணிக்கு நல்லைக் குருமணியின் சிஷ்யன் இசைக்கதாமாமணி கந்தர்மடம் பிரம்மசிறீ சிவ. வை.நித்தியானந்தசர்மா தேவி மகத்துவம் பற்றி பக்கவாத்திய சகிதம் தொடர் பிரசங்கம் செய்வார்.

# மாதகல் முருகமூர்த்தி உற்சவம்

மாதகல் நுணசை முருகமூர்த்தி கோவில் வருடாந்த உற்சவம் சென்ற 28-ம் திகதி சனிக்கிழமையன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது

தொடர்ந்து உற்சவங்கள் நடைபெற்று மேமாதம் 8-ம் திகதி இரதோற்சவமும், மறுநாள் தீர்த்த உற்சவமும் நடைபெறவுள்ளது. இரதோற்சவ தினத்தன்று அன்னதானமும் வழங்கப்படும். (13)

# வட்டு வில்

வட்டுக்கோட்டை மேற்கு அருள் மிகு சிறீ வாலாம்பிகை சமேத சர்வ சித்தி விநாவெர் ஆலய (அத்தியடிப் பிள்ளையார் கோயில்) மகா கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது. இன்று காலை 7.மணிமுதல் விசேட பூசைகளும் காலை 9-05 முதல் 9.45 மணிக்குள் மகா கும்பாபிஷேகமும் நடைபெறறு, மாலை 5 மணிக்கு வசந்த மண்டவப் யூசை இடம் பெறும்.

# காட்டில் ஆயுதம்மீட்பு

ஜே'வி.பி.யினராலோ அல்லது தமிழ் தேசிய இராணுவத்தினராலோ மறைத்து வைக்கப்பட்டதாக என சந்தேகிக்கப்படும் தன்னியக்கத் துப்பாக்கிகள் மூன்று பொலனறுவைகாட்டுப் பகுதியிலிந்து கண்டு பிடிக்கப் பட்டுள்ளது.

# புதியஉணவுமுத்திரை வழங்கப்படும்

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் புதிய உணவு முத்திரைகள், முத்திரைபெற தகுதியுடையவர்களுக்கு விரைவில் வழங்கப் படவுள்ளது.

கிராமசேவை அலுவலர்மள் தத்தமது பிரிவில் இந்த உணவு முத்திரைகளை செய்து வருகின்றார்கள்.


சிறு விளம்பரம்

கல்வி

கல்யாணி ஆங்கில கல்வி நில்லயம், 204, மானிப்பாய் றோட், ஓட்டுமடத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் சனி, ஞாயிறு ஆங்கில வகுப்புகள் 5.5.90 (சனி) தொடக்கம் முழு நேர வகுப்புகளாக நடைபெறும் S ஜெயராஜா, இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தர். 04268

# இதயநாதம்

திங்கட்கிழமை 30-04-1990

நல்வாக்கு

மக்களுக்காக மக்களால் நிறுவப்பட்ட ஆட்சி பூமியிலிருந்து ஒரு நாளும் மறையாது.
- லிங்கன்

ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்

## ஆசிரிய கலாசாலை மீள அதே இடத்தில்

பலாலி விமான நிலைய விஸ்தரிப்பு குறித்து இங்கே ஏற்கனவே குறிப்பிட்டிருந்தோம்.

விமான நிலைய விஸ்தரிப்பில் பலாலி ஆசிரிய கலாசாலையும் உள்ளடங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

எமது கல்விப் பாரம்பரியத்தில் முன்னர் இந்த ஆசிரியகலாசாலை ஆற்றியபணி மிக மிக முக்கியமானது.

1986 மார்ச்சில் இராணுவத்தினர் இதனுள் உட்பிரவேசித்தனர்.

எதுவித முன்னறிவித்தலுமின்றி இந்த ஆக்கிரமிப்பு நடவடிக்கை இடம் பெற்றது.

ஆசிரியப் பயிற்சிக்கல்லூரி இராணுவப் பயிற்சிக்களமானது.

எதிர்கால சமுதாயத்தை உருவாக்கும் ஆசிரியகல்லூரி எமது சமுதாயத்தை அழிக்கும் களமானது.

இக்கலாசாலையின் நூல் நிலையத்தில் இருந்த ஆயிரக்கணக்கான நூல்களுக்கு என்ன நடந்தனவென்று இதுவரை தெரியாது.

54 ஏக்கர் நிலப்பரப்பில் சகலவசதிகளுடனும், ஓர் உயர்கல்விநிலைய சூழலுடனும் இருந்த இக்கல்லூரி தற்போது மிகவும் வசதி குறைந்த நிலையில் கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் ஒரு பகுதியில் இயங்கி வருகிறது.

அங்கு ஒரு சாதாரண கல்லூரிக்கு இல்லாத வசதிகளுடனேயே கலாசாலை பெயரளவில் மிகக்குறைந்த ஆசிரிய மாணவர் தொகையுடன் இயங்கிவருகிறது.

இக்கலாசாலையை மீள அதே இடத்தில் இயங்கவைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதற்கான முயற்சிகளை வலி-வடக்கு பிரஜைகள் குழு மேற்கொண்டிருந்தது.

நிலைமை வழமைக்குத் திரும்பி சுமூகமான நிலை ஒன்று உருவாகிவரும் வேளை, சில சுயநலக்காரர்களால் கலாசாலை இடமாற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

குடிதண்ணீர் முதல், போக்குவரத்து, இருப்பிடவசதிகளற்ற நகருக்கு புறம்பான ஓர் இடத்தில் இதனை நிறுவ முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

இதற்கென ஒருவர் தனது காணியையும் கொடுத்துள்ளார்.

காணியை தந்துதவியவரின் தர்மசிந்தையை பாராட்டுகிறோம். இதே காணியை வேறு நல்லதோர்காரியத்திற்கும் இவர் வழங்கலாம் என்பதையும் குறிப்பிட விரும்புகிறோம்.

கலாசாலையை வேறு ஓர் இடத்திற்கு இடம்மாற்றி அமைப்பதால் இராணுவ முகாம் விஸ்தரிப்பை நாம் அங்கீகரிப்பதாக அமைந்துவிடும்.

இதனை ஏனோ இந்த சுயநலவாதிகள் உணரவில்லை.

நிவாரண விடயத்தில் பாதிக்கப்பட்ட கிராமங்களுக்கு முன்னரே, அரச உயர் அதிகாரிகளின் சொந்தக் கிராமங்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டது போல்,

பாதிக்கப்பட்ட, தகர்க்கப்பட்ட கட்டிடங்களையும் தமது பிரதேசங்களில் உயர வைக்க வேண்டும் என்று அரச அதிகாரிகள் நினைப்பது மிகவும் தவறாகும்.

போதியளவு காணியைக் கொண்டுள்ள விமான நிலையத்திற்கு விஸ்தரிப்பு அவசியமற்றது.

பலாலி ஆசிரியகலாசாலை உடன் பழைய இடத்தில் நிறுவப்பட்டாலே விஸ்தரிப்பு நிறுத்தத்திற்கு ஓர் நிரந்தரப்பலம் ஏற்படும்.

இதன் மூலம் மட்டுமே அப்பகுதியில் இடம் பெயர்ந்து பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான மக்கள் ஓர் நம்பிக்கையுடன் மீள அப்பகுதியில் குடியேற முடியும்.

இது விடயத்தில் சம்பந்தப்பட்டவர்கள் கூடிய கவனம் எடுக்கவேண்டியது அவசியம்.

# நமது அன்றாட குடும்ப வாழ்வில் சிறார்கள் எவ்வாறு பங்கேற்பது?

## -- ஓர் உளவியல் ரீதியான அணுகுமுறை

**கே. பரதன்**
**B. B. A (SRI LANKA)**

ஒரு உளவியல் ரீதியான அணுகுமுறை ''ஐந்தில் வளையாதது ஐம்பதில்வளையுமா'' ''தொட்டிற் பழக்கம் சுடுகாடு வரை'' இவ்வாறான பழமொழிகளில் இருந்து இளமைப் பருவத்தின் முக்கியத்துவத்தைநம்மால் உணர முடிகின்றது.

சிறார்களின் இளமைப்பருவம் ஒழுங்காக வழி நடத்தப்பட்டு செம்மைப்படுத்தப்பட வேண்டும். அன்றேல் அது ஒரு ஆரோக்கியமான எதிர்காலத்திற்கு வழி வகுக்க மாட்டாது. இன்றைய சிறுவர்கள்நாளைய பெரியவர்கள் எனவே இன்றைய சிறுவர்களின் இளமைப் பருவம் ஒழுங்காக திட்டமிட்டு வழிநடத்தப்பட வேண்டும். இந்த வகையில் சிறுவர்களை வீட்டு வேலைகளில் பங்கேற்க வைப்பது என்பது ஒரு முக்கிய படிமுறையாக அமைகின்றது. இதனை எவ்வாறு ஒழுங்காக செயற்படுத்த முடியும் என்ற விடயத்தில் ஏறக்குறைய எல்லாப் பெற்றோர்களும் ஒரு வழிமுறை தெரியாது செயற்படுகின்றார்கள் என்றே கூற வேண்டும்.

''எந்தப் பிள்ளையும் நல்லவராவதும்
தீயவராவதும் அன்னை வளர்ப்பதிலேயே''

என்று கவிஞர் கண்ணதாசன் தனது கவிதையொன்றில் குறிப்பிட்டுள்ளார். இவ்வகையில் சிறார்களை வழிப்படுத்துவதில் பெற்றோரின் பங்களிப்பு மிகவும் கூடுதலாகவே உள்ளது.

நம்மில் பெரும்பாலானோர் ஒரு சிறு பிள்ளையிடம் ஒரு வேலையை, ஒரு குறிப்பிட்ட நேரத்தில் செய்து முடித்துத் தரும்படி கொடுத்துவிட்டு, அந்தப்பிள்ளை அந்த வேலையை நாம் எதிர்பார்த்த வகையில் செய்து முடிக்கவில்லையாயின் கண்டிக்க அல்லது தண்டிக்க முற்படுகின்றோம். ஆனால் இவ்வாறான அணுகுமுறைகள் அந்தப் பிள்ளை பெற்றோருடன் ஒத்துழைக்கக் கூடிய சந்தர்ப்பத்தை உருவாக்கமாட்டாது.

பிள்ளைகளை அன்றாட குடும்ப வாழ்க்கையில் பங்கேற்க வைப்பது என்பது நல்ல பெற்றோரின் திறமையில் தங்கியுள்ளது பிள்ளைகளுக்கு வீட்டில் பொறுப்புக்கள் அளிக்கப்பட வேண்டும். இரண்டு வயதுப் பிள்ளைகூட தனது உடைகளை எவ்வாறு மடித்து ஒழுங்காக வைக்க வேண்டும், எங்கே வைக்க வேண்டும் என்று தெரிந்திருக்க வேண்டும். இவ்வாறு ஒரு பதினான்கு வயதுப்பிள்ளை அதிகமான வீட்டு வேலைகளை தானே செய்து முடிக்க கூடியவராக இருக்க வேண்டும்.

அதாவது தனது தனிப்பட்ட வேலைகளை தானே செய்து முடிக்க கூடியவராகவும், தனது உடமைகளை தானேபராமரிக்க கூடியவராகவும் இருத்தல் வேண்டும். இதோடு உணவுகளை சமைக்கக் கூடியவராகவும், வீட்டைத் துப்பரவாக வைத்திருக்கக் கூடியவராகவும் இருக்க வேண்டும். ஆனால்துரதிர்ஷ்டவசமாக அதிகமான பெற்றோர் தமது பிள்ளைகளுக்கு அளவுக்கதிகமாக இடம் கொடுப்பதன் மூலமும், அளவுக்கு அதிகமாக வழி காட்டலின் மூலமும் தமது பிள்ளைகளை சுயமாக இயங்க முடியாதவர்களாக்குகின்றனர். உண்மையில் பெற்றோரின் கடமை தமது பிள்ளைகளை பொறுப்புணர்ச்சி மிக்க, வளமுள்ள பிரசைகளாக்குவதே. இந்த வகையில் ஒரு திட்டமிடப்பட்ட வழி காட்டல் அவசியம்.

முதலில் எவ்வாறு இந்த செயற்பாட்டை எவ்வாறு ஒழுங்கமைக்கலாம் என்று நோக்குவோம். அதிகமான பெற்றோர்கள் தமது உன்னத இலக்குகளை அடைய முடியாமல் தவறுகிறார்கள். ஏனெனில் அவர்கள் தமது வேலைகளை திட்டமிட்டு செய்வதில் நாம் எந்தவொரு வேலையையும் திட்டமிடாமல் செய்யுமிடத்து அந்த வேலைகள் அடைய வேண்டிய இலக்குகளை அடைய மாட்டாது.

எனவே திட்டமிடல் எந்த ஒரு முயற்சியிலும் முதல் கருமமாக அமைய வேண்டும். சாதாரணமாக எமது குடும்பங்களில் உள்ள வேலைகளை குடும்ப அங்கத்தவர்கள் சந்தர்ப்பத்திற்கு ஏற்ற விதத்தில் செய்து கொள்ளுகின்றனர். இதனால் அனேக சந்தர்ப்பங்களில் குடும்ப அங்கத்தவர்கள் தாம் செய்யவேண்டிய வேலைகளை அறியாமல் தடுமாற்ற மடைகின்றார்கள்.

இவ்வாறான சந்தர்ப்பங்களை சில பெற்றோர்கள் வாராந்தம் அல்லது மாதாந்தம் ஒன்றாகக் கூடிக்கதைப்பதன் மூலம் தவிர்க்கின்றனர். மேலும் இவ்வாறான சந்தர்ப்பங்களில் சில குடும்ப பிரச்சனைகளை எவ்வாறு தீர்க்க முடியும் என்ற ஆலோசனைகளையும் பிள்ளைகள் வழங்குகின்றார்கள். பிள்ளைகள் வீட்டு வேலைகளை திட்டமிடுவதில் பங்கு பற்றுவதால் அவர்கள் கூடிய விருப்புடன் வீட்டு வேலைகளில் ஒத்துழைப்பு நல்குகின்றார்கள்.

இதுதொடர்பாக முதலில் ஒரு பட்டியல் தயாரிக்கப்பட வேண்டும். அதாவது ஒருவீட்டு வேலைகள் சுமுகமாக நடைபெறுவதற்கு தேவையான செயற்பாடுகள் எவை என வகுக்கப்பட வேண்டும். பின்னர் அவற்றை எந்தெந்த நபர்கள் செய்ய வேண்டும் என தீர்மானிக்க வேண்டும். இவ்வாறு ஆட்களை நியமிக்கும்போது அவர்களின் திறமை தன்மை என்பவற்றிற்கு ஏற்ப தொழில் ஒதுக்கீடு நடைபெற வேண்டும். மேலும் ஒருவர் ஒரு வேலையை தொடர்ந்து செய்யாமல் பல வேலைகளையும் மாறிமாறி செய்யவேண்டும். இதனால்ஒரே தொழிலை ஒருவர் தொடர்ந்து செய்யும் போது ஏற்படும் சலிப்புத் தன்மைஇல்லாமல் போகிறது,

அடுத்து பெற்றோர் பிள்ளைகள் மூலம் வேலைகளை செய்விக்கும்போது, தாமும் பிள்ளைகளைப்போல் சிந்தித்து செயற்பட வேண்டும். இதற்கு மாறாக, பிள்ளைகள் தம்மைப்போல் சிந்தித்து செயற்படவேண்டும் என பெற்றோர்கள் எதிர்பார்ப்பார்கள் எனின்அது எதிர்பார்த்தபலன்களைத் தரமாட்டாது. சில சந்தர்ப்பங்களில் பிள்ளைகள் தமது பெற்றோர் கூறும் வேலையைப் புரிந்துகொள்ள முடியாதளவுக்கு சிறு பிள்ளைகளாக இருக்கின்றனர். இவ்வாறான சந்தர்ப்பத்தில் சிறு பிள்ளைகள் புரியும் விதத்தில் வேலைகள் விளக்கமாக கூறப்பட வேண்டும்.

இங்கு ஓர் உதாரணத்தை நான் குறிப்பிடுகின்றேன். ஒரு சந்தர்ப்பத்தில் ஒரு தாய் ஒரு சிறு பிள்ளையிடம் தூள் அரைக்கும் நோக்கத்துடன் ஆயத்தம் செய்யப்பட்ட மிளகாயை மாலை வெய்யிலில் காயவைக்குமாறு கூறிக்கொடுத்து விடுகின்றாள் சிறிது நேரத்தின் பின் அந்தத் தாய் அதே பிள்ளையிடம் ''மிளகாயிற்கு தண்ணீர் ஊற்று'' என்று கூறுகின்றாள். தாய் மிளகாய்க்கன்றை நினைத்துத்தான் அவ்வாறு கூறினாள். ஆனால் சிறு பிள்ளை இதனை அறியாமல் காயவைத்த மிளகாயில் நீரை ஊற்றி விடுகின்றான். இது அந்த சிறு பிள்ளைக்கு சரியாக விளங்கக்கூடிய முறையில் அறிவுறுத்தல் வழங்காமையால் ஏற்பட்ட தவறு. எனவே விளக்கம் தெளிவாக வழங்கப்பட வேண்டும்.

இதேபோன்று ஒரு புதிய வேலையை நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு செய்யுமாறு பணிக்கும் போது அந்த வேலையை சிறு சிறு பிரிவுகளாக பிரித்து வழங்க வேண்டும். மேலும் கூடிய விளக்கங்களையும் கொடுக்க வேண்டும். உதாரணமாக குளியல் அறை ஒன்றை துப்பரவு செய்யுமாறு ஒரு பிள்ளையிடம் கூறும்போது அந்தவேலைக்குத் தேவையான உபகரணங்கள் யாவும் வழங்கப்பட வேண்டும். மேலும் ஒவ்வொரு பொருட்களையும் எவ்வாறு துப்பரவு செய்யவேண்டும் என விளக்கம் கொடுக்கப்படவேண்டும்.

இதுபோன்றே ஒரு பெரிய முற்றத்தை துப்பரவு செய்யுமாறு பணிப்பதற்கு பதிலாக ஒரு சிறு பகுதியை மாத்திரம் குறிப்பிட்டு கூறி சுத்தம் செய்யுமாறு கேட்க வேண்டும். இவ்வாறு செய்வதனால் சிறு பிள்ளையும் வேலையினை சலிப்பின்றி ஆர்வத்துடன் செய்து முடிக்கும்.

அடுத்து சிறு பிள்ளைகள் வேலைகளை செய்து முடித்த பின் அவர்களின் செயல் திறமைகளை பாராட்ட வேண்டும். மறாக அவர்கள் செய்யும வேலையில் உள்ள குறைகளை மட்டும் கண்டு கூறுவதனால் அந்தப்பிள்ளை தான் எந்த வேலையையும் சுயமாக செய்து முடிக்கும் வல்லமையற்றவர் எனதன்னைத் தானே குறைவாக மதிப்பிடும் நிலையுருவாகின்றது. மேலும் பிள்ளைகள் தோல்விகளை கண்டு மனம் சோர்பவர்களாகஇருத்தல் கூடாது. மாறாக அவர்கள் தமது குறிக்கோளை நோக்கி மீண்டும் மீண்டும் முயற்சி செய்யும் மனப்பான்மையுடையவர்களாக வளரவேண்டும். இந்த மனோதைரியத்தையும் பிள்ளைகள் தமது பெற்றோர் மூலமே பெற்றுக் கொள்ளுகின்றார்கள்.

இதேவேளை ஒரு பிள்ளை தான் விடும் தவறினால் ஏற்படும் விளைவுகளையும் உணரக்கூடிய சந்தர்ப்பங்களை பெற்றோர் உருவாக்க வேண்டும். ஒரு பிள்ளை தான் அணிந்த ஆடையை அழுக்குள்ள இடத்தில் போட்டுவிட்டு சென்றால் பின் அந்த அழுக்குடைய உடையை அணியும்போது தனது தவறை உணரும். இந்தவகையில் பெற்றோர் மிகுந்த மதிநுட்பத்துடன் செயற்படவேண்டும்.

மேலும், பிள்ளைகள் செய்யும் வேலைகட்கு சன்மானங்கள் அல்லது பாராட்டுக்கள் வழங்கப்பட வேண்டும். இது தொடர்பாக பல நிபுணர்கள் கூறுவது யாதெனில் வீட்டு வேலைகளுக்கு பணரீதியான சன்மானங்கள் பிள்ளைகளுக்கு கொடுக்கப்படக் கூடாது என்பதே காரணம் இவ்வாறான வேலைகள் குடும்ப அங்கத்தவர்களின் பொறுப்பாகவே கருதப்படுகின்றமை. பதிலாக உங்கள் பிள்ளை ஒரு கடினமான வேலையை செய்து முடிக்கும் போது அதற்கு பிரதியுபகாரமாக ஒரு சுற்றுலா அல்லது பிள்ளைகளுக்கு பிடித்தமான அம்சங்களை ஒழுங்கு செய்து கொடுக்கவேண்டும். இவை நிச்சயமாக பணரீதியற்றபிரதியுபகாரமாக இருக்க வேண்டும்.

—7ஆம் பக்கம் பார்க்க

# செய்தி மஞ்சரி

## மீனவருக்கு நிவாரணம்

மட்டக்களப்பு மீன்களுக்கு ஏற்பட்ட வாவி நோய் காரணமாகதொழில் வாய்ப்பை இழந்த மீனவர்கள் நிவாரணம் கோரி அரச அதிபர், மீன்பிடி விஸ்தரிப்பு அலுவலர், சமூகசேவைகள், உதவிப் பணிப்பாளர் ஆகியோருக்கு மகஜர்களைஅனுப்பி வைத்துள்ளனர்.

## ஒப்பந்தத்திற்கு இது நேரமல்ல

இலங்கை, இந்திய நட்புறவு நடவடிக்கையினை விரைவுபடுத்துவதற்கு தற்போதுள்ள இந்திய அரசியல் நிலைமை ஆரோக்கியமானதாக இல்லை'

'எந்த சமயத்திலும் காஷ்மீர் விவகாரம் தொடர்பாக இந்திய பாகிஸ்தான் மோதல்கள் வெடிக்கலாம். பஞ்சாப்பிலும் அமைதியில்லை இந்த இக்கட்ட நிலையில் நட்புறவு உடன்படிக்கை தொடர்பாக இந்தியாவை நச்சரிப்பது நாகரிகம் அல்ல'

இவ்வாறு பத்திரிகையாளர் எழுப்பிய கேள்வி ஒன்றிற்கு பதில் அளிக்கும் போது அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன கூறியுள்ளார்.

## விபத்தில் யுவதி பலி

கடந்த வெள்ளி மாலை சாவகச்சேரி நுணாவில் சந்தியில் இடம்பெற்ற மோட்டார் வான் சைக்கிள் விபத்தின் போது கண்டியைச் சேர்ந்த இளம் யுவதி ஒருவர் ஸ்தலத்திலே பலியானார்.

சைக்கிளில் சென்ற தம்பதிகள் இருவர் படுகாயங்களுடன் யாழ்.பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## தபால் விடுமுறை

மேதினத்தை முன்னிட்டு மே 1- ஆம் திகதி தபால் விடுமுறையாகும். அன்றைய தினம் சகல தபால் அலுவலகங்களும் ஞாயிற்றுக்கிழமைபோல் நடைபெறும்.

## மாகாண அமைச்சில் வெற்றிடம்

வட கிழக்கு மாகாண கல்வி அமைச்சில் கல்விப் பணிப்பாளர்களாகக் கடமையாற்றிய பலர் தற்போது பல்வேறு அமைச்சுகளுக்கும், பதவிகளுக்கும் சென்றுள்ளதால் இவர்கள் வகித்து வந்த பதவிகள் வெற்றிடமாக இருப்பதோடு அமைச்சின் பல வேலைகள் காலதாமதமாகியும் வருகின்றது:

## கடத்தல் அதிகரிப்பு

கடந்த 25 நாட்களுக்குள் 14 இலட்சத்து 58ஆயிரம் ரூபா கடத்தல் பொருட்களும், ரூபா 47 ஆயிரம் பெறுமதியான உதிரிப்பாகங்களின் கொள்ளை ஒன்றும் துறைமுகப் பொலிசாரால் கண்டு பிடிக்கப்பட்டதோடு சந்தேக நபர்களும் கைது செய்யப் பட்டுள்ளனர்.

## சமாதானவீரர் காயமுற்றனர்

மாத்தளையில் இடம் பெற்ற சமாதான சைக்கிள் ஓட்டப் போட்டியில் இடம் பெற்ற விபத்தின் போது காயமடைந்த 15 பேரில 7 பேர் பலத்த காயங்களுக்குள்ளாகி மருத்துவ மனையில அனுமதிக்கப் பட்டுள்ளார்கள்.

போட்டி முடிவடையும் நேரத்தில் ஒரு சைக்கிள் வீரனின் சைக்கிள் சறுக்கி விழுந்ததைத் தொடர்ந்து பின்னால் தொடர்ந்து வந்தவர்களும் ஒருவர் மேல் ஒருவர் வீழ்ந்த போதே பலர் படுகாயங்களுக்குக் குள்ளானார்கள் எனத் தெரிய வந்துள்ளது.

## நிவாரணம் வழங்க கோரிக்கை

உணவு முத்திரை பெறும் தகுதியை இழந்த மட்டக்களப்பில்உள்ள பயிலுநர்ஆசிரியர்கள், புகையிரதக்கடவை ஊழியர்களின் குடும்பம்.பொலிஸ், ஆயுதத் படை வீரர்களின் குடும்பங்கள் ஆகியோர் வறுமை நிவாரணம் தமக்கு வழங்கப்பட வேண்டும் எனக் கோரி மனு செய்துள்ள்னர்.

## அரச கரும மொழி அமுல்

அரசகரும மொழிகள் தொடர்பானவிதிகளைக் கடுமையாக அமுல் நடத்துமாறு அரச கருமத்மொழி ஆணையாளருக்குஉள்நாட்டலுவல்கள் பொதுநிர்வாக மாகாணசபை அமைச்சர் திரு. பெஸ்டஸ்பெரேரா பணிப்புரை விடுத்துள்ளார்.

அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் சபைகள் ஆகியவற்றின் தெப்டர்புகள் மற்றும் வெளியீடுகள் பிரசுரங்கள் சுற்று நிருபங்கள் ஆகியவற்றின் அரச கரும மொழி சட்ட ரீதிகள் கடுமையாகப் பின்பற்றப்படவேண்டும் என்றும் அன்றேல் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பயிற்சித் திட்ட வகுப்புக்கள்

மன்னார் மாவட்டத்தில் அண்மையில் தெரிவான பயிலுநர் ஆசிரியர் களுக்கான பயிற்சி திட்ட வகுப்புக்கள் கடந்த வாரம் முதல் நடைபெற்று வருகின்றன.

மன்னார் உதவி அரசாங்க அதிபர் பிரிவில்தெரிவானோர் மன்னார் அல்காஜ் மகாவித்தியாலயத்திலும் நனாட்டான் முசலி உதவி அரசாங்க அதிபர்கள் பிரிவிலும் தெரிவானோர் முருங்கன் மகாவித்தியாலயத்திலும் மாந்தை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தெரிவான பயிலுநர் ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்புக்கள் அடம்பன் மகாவித்தியாலயத்திலும் நடைபெறுற்வருகின்றன.

## மாணவருக்கு இலவசப் பயிற்சி

அரியாலை காந்தி சனசமுக நிலையத்தின் கல்விக்குழு 5ம் ஆண்டுப் புலமைப்பரிசிற்பரீட்சையிற் பங்கு பற்றவிருக்கும் அப்பகுதிப் பாடசாலைகளிற் கல்வி பயிலும் பிள்ளைகளுக்குப் பிரத்தியேகப் பயிற்சி வகுப்புக்களை ஆரம்பிக்கவுள்ளது. இப்பயிற்சி வகுப்புக்கள் ஒவ்வொரு நாளும் பிற்பகல் 4.00 மணிக்கு ஆரம்பமாக இருக்கின்றனவென்றும் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் இப்பயிற்சி வகுப்புக்கள் நடாத்துபவர்கள் என்றும்தெரிய வருகிறன. (37)

## சினிமாஸ் குணக்கொலையிலும் இவர் தொடர்பு

20 கொலைகளுடன் நேரடியாகத் தொர்புடையவர் என கைது செய்யப்பட்டுள்ள 19 வயது இளைஞர் சினிமாஸ் குணரத்திணம் கொலையுடனும் தொடர்புள்ளவர் எனக் கூறப்படுகிறது.

இவ்விளைஞர் கொழும்பில் உள்ள பிரபலதனிபார் நிறுவனம் ஒன்றில் பாதுகாப்பு உத்தியோகத்தராகக் கடமையாற்றி வருபவர் எனப்பொலிஸ் விசாரணைகள் தெரிவிக்கின்றன.

## புனரமைப்பு நடவடிக்கை

புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் உயரதிகாரிகளும் நோராட் நிறுவன அதிகாரிகளும் அண்மையில் மட்டக்கப்பு மாவட்டத்திற்கு விசயம் செய்தனர்.

இவர்கள் புனரமைப்புத் திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் வீடமைப்புத் திட்டங்கள் மற்றும் பாடசாலைக் கட்டிடங்களைப் பார்வையிட்டனர்.

## பரு- சாவ. வீதியில் சேதமான பதது திருத்தப்படுமா?

இந்தியப் படையினரால் சேதமாக்கப்பட்ட சாவகச்சேரி— பருத்தித்துறை வீதியிலுள்ள பளகழிமதகுஇதுவரை சீரமைக்கப்படவில்லை. இதனால் வாகனதாரர்களும், பிரயாணிகளும் பலத்த சிரமத்துக்குள்ளாகி வருகின்றனர்.

இதனால் சாவகச்சேரி செல்லும் வாகனங்கள் அனைத்தும் கொடிகாமம் ஊடாகவே பயணம் செய்ய வேண்டிய நிலை தொடர்கின்றது. (44)

## சிறுவர்களுக்கு இலவச கல்வி

புங்குடுதீவு 11, 12, ஆகிய வட்டாரங்களிலுள்ள சிறுவர்களின் நன்மை கருதி அவர்களுக்கு எழுத்து, வாசிப்பு, ஆங்கிலம், சமயம், கணிதம் போன்ற பாடங்களை புகட்டும் நோக்குடன் புங்குடுதீவு பாரதிசனசமூக நிலைய உறிப்பினர்களினால் இலவச வகுப்புக்கள் நடத்தப்பட்டு வருகின்றது.

வாரத்தில் சனி, ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாட்களில் அச்சிறார்களுக்கு இவ்வாறு கல்வி புகட்டப்பட்டு வருகிறது. (20)

## சமய அறிவுப் போட்டி

மாதகல் இந்து சமய அபிவிருத்திச் சங்கம் மாதகல் பகுதியிலுள்ள பாடசாலை மாணவர்கள மத்தியில் சமயஅறிவுப் போட்டியொன்றை வைகாசி மாதத்தில் நடத்தவுள்ளது.

12வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கு எழுத்துப்பரீட்சையும், 12 வயதுக்கு மேற்பட்ட மாணவர்களுக்குபஞ்சபுராணம்ஓதும் போட்டியும் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாக சங்கத்தலைவர் வித்துவான் பொன்.கந்தசாமி இது பற்றி தெரிவித்தார். (13)

### சின்னத்தம்பனையில்

## மீளவும் குடியேறாவிட்டால் காணிகள் பறிமுதலாகும்

(வவுனியா)

இடம்பெயர்ந்த சின்னத்தம்பனை குடிமக்கள் மீளவும் அங்கு சென்று குடியேறவேண்டும். இல்லையேல் அக்காணிகள் காணி இல்லாதவர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படும் என்று செட்டிக்குளம் பகுதி விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப் பிரதேசப் பொறுப்பாளர் திரு. ரமேஷ் தெரிவித்தார்.

ஐந்து வருடத்திற்கு முன்பு சின்னத் தம்பனையிலிருந்து இனக்கலவரத்தினை அடுத்து மக்கள் வெளியேறினார்கள்.

தற்போது அமைதியான சூழ்நிலை ஏற்பட்டுள்ளதினால் மீளவும் குடியேறுவது அவசியமாகும் எனப் புலிகள் வலியுறுத்திவருகின்றனர்.

எமது பிரதேசம் பாதுகாக்கப்படவேண்டியது ஒன்றாகும் எனவும் புலிகள் வட்டாரம்தெரிவித்தது. (11)

## நயினை இறங்குதுறையை உடன் திருத்த உத்தரவு

நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்த உற்சவ காலங்களில் வரும் யாத்திரிகர்களினது பாதுகாப்புக் கருதி ஆலயத்திற்கு முன்னால் உள்ள இறங்குதுறை மேடையை சுமார் ஒன்றரை லட்சம் ரூபா செலவில் திருத்தியமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சென்ற வாரம் நயினாதீவிற்கு சென்ற யாழ் மாவட்ட அரசாங்க அதிபருக்கும் இப்பாலத்தின் நிலை பற்றி நேரடியாகக் காண்பிக்கப்பட்டதன் பேரில் இப்பால வேலைகளை உடனடியாக புரனரமப்பு செய்யுமாறும் பணிக்கப்பட்டுள்ளது. யாழ்மாவட்ட பெருந்தெருத் திணைக்களம் இப்பால வேலைகளை செய்ய முன்வந்திருக்கின்றது,.

## மரத்தேவை பூர்த்தி செய்ய மரக்காலைகள் ஆரம்பம்


வன்னிப் பகுதியைச்சேர்ந்த வவுனியாவில் வேப்பங்குளத்திலும், முல்லைத்தீவில் கரைடபட்ட முறிப்பு, கிளிநொச்சி, ஆகிய இடங்களில் மரக்காலைகளை ஆரம்பித்துத் தாம் நடத்தி வருவதாக விடுதலைப்புலிகள் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இம்மூன்று மாவட்டங்களினதும் மரத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவும் கட்டுப்பாடின்றிக் காடுகளில் உள்ள மரங்களை அழிக்கும் நடவடிக்கைகளைத் தடுப்பதற்காகவுமே இப்புதிய செயற்பாடு தொடங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளூர்த்தேவைக்குத் தேவையான அளவு மரங்களை இம்மூன்று இடங்களிலும் செயற்பட்டுவரும் நிலையங்களில் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

எக்காரணத்தைக் கொண்டும் இங்கிருந்து மரங்களையோ பலகைகளையோ வெளி மாவட்டங்களுக்குக் கொண்டு செல்ல அனுமதிக்கப்பட மாட்டாது என்றும் இவ்வட்டாரங்கள் கூறின.

## அருட்திரு லோங் அடிகளின 29 ஆம் ஆண்டு நினைவுதினம்



அமலமரித்தியாகியும்புனித பத்திரிசியார் கல்லூரியின் முன்னாள் அதிபருமான அருட்திரு ரி.எம். எவ் லோங் அடிகளின் 29 ஆம் ஆண்டு நினைவு தினம் இன்று கொண்டாடப்படவுள்ளது.

இன்றுகாலை 6.30மணிக்கு புனித பத்திரிசியார் சிற்றாலயத்தில் யாழ். ஆயரின் செயலாளர் அருட்திரு செல்வராசா அடிகள் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுப்பார். அதனைத் தொடர்ந்து பழைய மாணவர் செயலகத்தில் காலை உணவு பரிமாறப்படும். தொடர்ந்து சங்க அங்கத்தவர்கள் யாழ். பொது நூலக வளாகத்தில் கூடி, வண.லோங் அடிகளின் உருவச்சிலைக்கு யாழ் அரச அதிபர் அன்ரன் அல்பிறட் மலர் மாலை அணிவித்து புகழுரைகள் நிகழ்த்துவார்.

இவ்வருடம்வைகாசித்திங்கள் 22ஆம்திகதியன்று இலங்கை அரசாங்கம் ஓர் நினைவு முத்திரை வெளியிட்டு வண. லோங் அடிகளைக் கௌரவிக்க உள்ளது.

அயர்லாந்து நாட்டவரான வண. லோங் அடிகள் யாழ் நகரில் மன உறுதியுடனும், துணிவுடனும் செயலாற்றி யாழ் மாநிலத்தில் மட்டுமன்றி இலங்கை முழுவதிலுமே சிறப்பு எய்தினார். அவர் கல்வி அபிவிருத்தியிலும் சமூகத்தில் பின்தங்கியவரின் எழுச்சியிலும் அரும்பணி புரிந்தார். இவதுக் தீவிர முயற்சியினாலும் மேலிடத்தில் இவருக்கிருந்த செல்வாரகினாலும் வடக்கிற்கு விமானச் சேவையைப் பெற்றுக் கொடுத்தார். இவர் தலைமையில்தான் ஒரு கோடி ரூபா செலவில் யாழ். பொது நூலகம் நிறுவப்பட்டது. இதுவரை காலமும் பொம்மைக் கூத்து முறையில் நிகழ்ந்த பாடுகளில் திருக்காட்சி இவருடைய வழிநடத்துதலினால் பத்திரிசியார். கல்லூயில் நடிகர்களினால் முதன் முதலாக நடாத்தப்படடது. மேலும் இவர் இக்கல்லூரியை மேல்நிலைப்படுத்த வேண்டும் என்று பல அபிவிருத்தித் திட்டங்களை வகுத்தார்.

வண. லோங் அடிகள் யாழ்ப்பாணத்தில் அன்பு கொண்டிருந்தார். யாழ். நகருக்காவே வாழ்ந்தார். தன்னை ஒரு யாழ் மகன் என்று சொல்வதில் பெருமை அடைந்தார். எலலா நேரமும் எல்லா மக்களும் எல்லாமாய் வாழ்ந்த இப்பெரியாரின் நினைவு யாழ் மக்கள் மனதில் என்றும் நிலைத்திருக்கும்.

இவர் இறைவன் சந்நிதானத்தில் நித்திய வாழ்வு பெறுவாரா

யே' ப- கி' பிலிப்ஸ்

# ஜனசக்தித் திட்டத்திற்கு ஜப்பான் அரசு உதவி வழங்கும்

வரட்சி நிவாரணத் திட்டம் மற்றும் ஜனசக்தித் திட்டத்திற்கு உதவ ஜப்பான் அரசு முன் வந்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் ஏழரைக் கோடி ரூபா பெறுமதியான தகரத்தில் அடைக்கப்பட்ட மீன்கள் இலங்கைக்கு ஜப்பானினால் அன்பளிப்பாக வழங்கப்படவுள்ளன.

இந்த மீன்ரின்கள் மலிவு விலையில் மக்களுக்குவிற்பனை செய்யப்படும். அதன் மூலம் கிடைக்கும் வருமானம் ஜனசக்தித்திட்ட செயற்பாட்டுக்குப் பயன்படுத்தப்படும்.

இலங்கை அரசாங்கம் விடுத்த வேண்டுகோளையடுத்தே ஜப்பான் மேற்படி அன்பளிப்பை வழங்க முன் வந்தது.

## கிளிநொச்சி

# பஸ்தரிப்பில் தனியார் வாகனம் பயணிகளை ஏற்ற பஸ் இல்லை

கிளிநொச்சி நகர் மத்திய பஸ்தரிப்பு நிலையத்தில் தனியார் வாகனங்கள் மோட்டார் சைக்கிள்கள் என்பன எந்த நேரமும் நிற்பதால் பயணிகள் மிகுந்த சிரமத்தின் மத்தியில் தான் பயணத்தை மேற்கொள்கின்றனர். பஸ்களையும் இப்பகுதியில் நிறுத்த முடியாது இருக்கிறது.

அதேவேளை பஸ்நிலையத்தில் நேரப்பதிவாளர் இல்லாத நிலையும் உள்ளது.

தனியார் வாகனங்கள் இவ் இடத்தில் நிறுத்தப்படுவதால் பயணிகள் போகவேண்டிய இடத்திற்கு போகமுடியாதிருப்பதுடன் தாமததமானபயணத்தை மேற்கொள்ள வேண்டியுள்ளது. (35)

## "சம்பூர்ண இராமாயணம்" தொடர் பிரசங்கம்

கோண்டாவில் நெட்டிலைப்பாய் அருள்மிகு பிள்ளையார் கோவில் வருடாந்த மகோற்சவம்இன்று 30 ந் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகி 9ந் திகதி புதன் கிழமை தீர்த்தத் திருவிழாவுடன் நிறைவு பெறும். சிறப்பு நிகழ்ச்சியாக தினமும் மாலை 7 மணிக்கு நல்லைகுருமணியின் சீடன் கானகதாவாரிதி வண்ணை பிரம்மசிறி சிவ. வை. நித்தியானந்த சர்மா சம்பூர்ண இராமாயண தொடர் பிரசங்கம் பக்க வாத்திய சகிதம் நிகழ்த்துவார்.

## உங்களுடையதா?

கோண்டாவில் ஐயாத்துரை இராசரத்தினம் என்பவருடைய தேசிய ஆளடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு முரசொலி ஆசிரிய பீடத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் ஆசிரிய பீடத்தில், அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

* *

வீ. கந்தசாமிஎன்பவருடைய பாராளுமன்றபணியாளர்ஆளடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு முரசொலி அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் ஆசிரிய பீடத்தில், அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

# கோட்டை கிறிஸ்தவ ஆலயம் வழிபாடுநடாத்த தீர்மானம்

யாழ்ப்பாண கிறிஸ்தவ ஐக்கிய சங்கத்தின் வருடாந்தக் கூட்டம் யாழ்ப்பாணம் வை, எம். சி. ஏ. ஸ்தாபன மண்டபத்தில் சங்க உபதலைவர் திரு. அரியரத்தினம் தலைமையில் ஆரம்பமாகியது.

சங்கத்தின் செயலாளராகவும், பொருளாளராகவும் நீண்டகாலம் பணியாற்றி சமீபத்தில் காலம் சென்ற திரு. அன்னப்பாவின் மறைவுச்கு இரண்டு நிமிடநேரம் அஞ்சலி செலுத்தியதுடன் அவரது மறைவுக்கு அனுதாபத் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

புதிய வருட நிர்வாகிகள் தெரிவில் தலைவராக திரு. ஏ. சி. கனகராசாவும் உபதலைவர்களாக அருட்திரு ஐசக்செல்வரத்தினம், வைத்தியகலாநிதி இராசேந்திரா ஆகியோரும் செயலாளராக அருட்திரு கிறிஸ்ரோ .ரி றொபேட் அடிகளாரும், உபசெயலாளராக திரு. எஸ்.பி ஜீவானந்தமும் பொருளாளராக திரு. இராசசிங்கமும், மற்றும் 12 நிர்வாக சபை உறுப்பினர்களும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணம் கோட்டைக்குள் இருக்கும் கிறிஸ்தவ தேவாலயத்தை புனரமைப்புச் செய்து மீண்டும் இவ்வாலயத்தில் வழிபாடுகளை ஆரம்பிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. (27)

# ஆற்றலாளர் ஆங்கு



சாவகச்சேரியில் கல்வயல் கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்வன் நடராஜா கங்காகரன் தனது க. பொ. த. (உயிரியல் பிரிவின்) உயர்தரப்பரீட்சை வெற்றியால் மகிழ்ச்சி யடைந்தவராகக் காணப்பட்டாலும், தனக்குள்ள பணி இனி மேல் தான் தொடங்குவதான ஆதங்கத்தைக் கொண்டவராகக் காணப்பட்டார்.

தனது இலட்சியத்துக்கான 'தடை' தாண்டப்பட்டது. என்னும் கருத்துடன் தனது பரீட்சைப்பெறுபேற்றுக்கு முத்தாய்ப்பு வைத்தார். இந்நிலையில் தன்னைச் சபை நடுவே முந்தியிருக்க வைத்த தந்தைக்கும். ஈன்றபொழுதிலும் பெருதுவக்கும் தாய்க்கும் தனது பரீட்சைப்பெறுபேறு சமர்ப்பணமென்று கூறும்போது சற்று உணர்ச்சிவசப்பட்டுக்கொண்டார்.

''யாழ்' இந்துக் கல்லூரி என்னை உயர் வகுப்பில் நெறிப்படுத்தியமையை அங்கு எனக்கு உரமூட்டிய ஆசான்களை நான் நினைத்துப் பார்க்கின்றபோது எனக்கு ஆரம்ப அறிவூட்டிய கல்வயல் ஸ்ரீ ஷண்முகானந்தா ஆரம்பப்பாடசாலையையும், இடைநிலைக் கல்வியையும், உயர் நிலைக் கருவியின் ஒரு பகுதியையும், எனக்களித்த சாவகச்சேரி இந்துக் கல்லூரியையும். அங்கே என்னை வளப்படுத்திய ஆசான்களையும் என்னால் மறக்கவே முடியாதிருக்கின்றது' என்று நன்றிப் பெருக்குடன் கூறினார்.

''தன்னை மட்டும் மையமாக வைத்துச் சிந்திக்காது நாட்டின் மக்களை நேசித்து இலட்சியம் ஒன்றிற்காகத் தம்மையே தியாகம் செய்யும் எத்தனையோ இளைஞர்கள் மத்தியில் நான் தலை தாழ்த்தி, தலைவணங்கி மரியாதை செய்கின்றேன். அவர்களது தன்னலமற்ற தியாகமே என்னைப் போன்றவர்களை ஆற்றலாளர்களாக வழியமைத்தது என்று கூறிய கங்காகரன்''எமது கல்வித்துறை ஏற்படுத்திய 'விபத்தில்' விளைவு பலரை இன்று பல்கலைக் கழகத்திற்கு வெளியே நிற்கவைத்துள்ளது, அவர்களது ஆற்றல் எம்மைவிட எவ்விதத்திலும் குறைந்ததல்ல, எனினும் இந்நிலை மாற நாம் சிந்திக்கவேண்டும், சரியான முறையில் எமது கல்வி திட்டமிடப்படாமையே இதற்கானகாரணம்'' என்றார். ''என்னை நானாக வர விதி செய்த எனது கிராமத்தை நான் நேசிக்கிறேன்.

எனது நாட்டுக்குச் சேவை செய்வதே எனது பாக்கியமாக நான் நினைக்கின்றேன்'' என்று இலட்சியக்கனவு கண்டு கொள்ளும் இந்த 18 வயது யாழ். இந்துக்கல்லூரி மாணவனுக்கு எமது முரசொலியின் வாழ்த்துக்களும் உடன் இருக்கும்,

## கூட்டுறவுச்சங்க கிளைக்குழுதேர்தல் இரத்து

வடமராட்சி கிழக்கில் புதிய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் முதலாவது கிளைக்குழுத் தேர்தலும் அதனையொட்டி வரஇருந்த தலைவர் நெறியாளர் குழுத் தெரிவும் திடீரெனப் பின் போடப்பட்டுள்ளது.

அப்பகுதியிலுள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களினூடாக நடைபெற்று வந்த வாக்காளர் இடாப்பு திருத்தும் வேலைகள் அனைத்தும் முடிவடைந்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இவ்வேலைகள்முடிவடைந்த பின்னும் கிளைக்குழுத் தேர்தல் பின்போடப்பட்டது. குறித்து அப்பகுதிப் பொதுமக்கள் கவலைகொண்டுள்ளனர். (43)

## கிளிநொச்சியில் சந்தைநிலை மோசம்

கிளிநொச்சி பொதுச்சந்தையில்வியாபாரிகள் ஓலையால் வேயப்பட்ட கொட்டில்களில் வியாபாரம் செய்து வருகின்றனர் இக்கொட்டில்கள்வேயப்பட்ட கிடுகுகள் மிகவும் பழுதடைந்து ஈர்க்குகள் பொதுமக்களின் தலைகளைக் குத்தி பாதித்துவருகிறது.

இச்சந்தையில் மிகவும்உயரம் குறைவான கொட்டில்களே அமைக்கப்பட்டுள்ளதால் வியாபாரிகளும் பொது மக்களும் சிரமங்களுக்கு உள்ளாகி வருகின்றனர். (35)

# விளையாட்டுச் செய்திகள்

## கூடைப்பந்தாட்டப் போட்டி

ஓல்ட் பற்றிசன் விளையாட்டுக் கழக அணிக்கும், சென்றலையிற்ஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையில், யாழ் மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற சினேக பூர்வ வலைப்பந்தாட்டப் போட்டியில் சென்றலையிற்ஸ் கழக அணி 46:36 என்ற புள்ளிகள் கணக்கில் வெற்றி பெற்றது.

ஆட்ட ஆரம்பத்தில் வெகு விறுவிறுப்பாக ஆடி முன்னணியில் நின்ற பற்றிசன் இடைவேளையின் பின், முதலில் காட்டிய வேகத்தைக் காட்டத் தவறியதால் தோல்வியைத் தழுவ வேண்டியதாயிற்று.

சென்றலையிற்ஸ் தலைவர் ஆர். சுந்தரலிங்கம் திறம்பட ஆடி தனது அணிக்கு வெற்றியை தேடிக் கொடுத்ததும் அல்லாமல், வலைப்பந்தாட்டத்தில் தான் ஒரு வல்லுநர் என்பதையும் நிரூபித்து, பார்வையாளர்களின் ஏகோபித்த பாராட்டுதலையும் பெற்றார்.

நடுவர்களாக கே. யதுகுலசிங், எஸ். விக்னேஸ்வரன் ஆகியோர் கடமையாற்றினார்கள். (16)

## சென் மேரிஸ் வெற்றி

அரசடி ஜனசக்தி சனசமூக நிலையத்தினால் நடத்தப்பட்டுவரும் கரபந்தாட்ட சுற்றுப் போட்டியின் ஓர் அங்கமாக அரசடி ஜனசக்தி விளையாட்டரங்கில், உடுவில் சென் மேரிஸ் விளையாட்டுக் கழக அணிக்கும், தாவடிசிறி கணேசா விளையாட்டுக் கழகத்திற்கும் இடையில் நடைபெற்ற கரபந்தாட்டப் போட்டியில் இரு நேர் செற்றுகளால், 15:8 15:12 என்ற ஸ்கோர் அடிப்படையில், கடும் போட்டியின் பின் சென் மேரிஸ் அணி வெற்றி பெற்றது:

நடுவராக திரு. ஏ. தவம் கடமை யாற்றினார்: (16)

## உதைபந்தாட்டப் போட்டி

றம்ழான் தினத்தைமுன்னிட்டு சாபி நகர் ஜின்னா சனசமூக நிலையமும் புதிய சோனகத் தெரு சனசமூகநிலையமும் இணைந்து உதைபந்தாட்டப்போட்டி ஒன்றைநடாத்தியது. இப்போட்டி புதிய குடியிருப்பு விளையாட்டுமைதானத்தில் நடைபெற்றது.

## வேலுப்பிள்ளை ஞாபகார்த்த போட்டி

பருத்தித்துறை மாவட்ட உதைபந்தாட்ட லீக்கினால் நடாத்தப்படும் அமரர் வேலுப்பிள்ளை ஞாபகார்த்த உதைபந்தாட்டப் போட்டிகள் வெகு விமரிசையாக நடைபெற்று வருகின்றது (44)

## கூடைப் பந்தாட்ட பயிற்சிமுகாம்

இம் மாதம் 26 ம் திகதி தொடக்கம் கூடைப் பந்தாட்ட பயிற்சி முகாம் ஒன்று யாழ் மத்திய கல்லூரியில் நடைபெறுகிறது. 50 க்கும் மேற்பட்ட வீரர்கள் இப்பயிற்சி முகாமில் பங்கு பற்றி வருகிறார்கள்.

இப்பயிற்சி முகாமில் செய்முறைகளையும் விரிவுரைகளையும் அதன் இயக்குநர் ஆர். சுந்தரலிங்கம், திரு. கே. யதுகுலசிங்கின் உதவியுடன் செய்து வருகிறார். (16)

# கோழி நோயைகட்டுப்படுத்த கோழிகளுக்குதடுப்பு ஊசி

சண்டிலிப்பாய் யாழ்ப்பாணம் பிரதானவீதியிலுள்ள சங்கானை கால்நடை வைத்திய அதிகாரியின் அலுவலகத்தில் ஒவ்வொரு சனிக்கிழமையிலும் கோழி நோய்த் தடுப்பு ஊசி மருந்து இலவசமாக போடப்பட்டு வருகின்றது.

வீடுகளில் கோழிப் பண்ணை நடாத்துபவர்கள் தங்கள் கோழிகளுக்குநோய்த் தடுப்பு ஊசி மருந்து போடுவதற்கு தமதுஅலுவலகத்துடன் தொடர்பு கொண்டு விண்ணப்பித்தால் நேரடியாக அங்கு சென்று தடுப்பு ஊசி மருந்துகளை போட முடியும் என்று சங்கானை கால்நடை வைத்திய அதிகாரி முரசொலிக்கு தெரிவித்தார்.

கிராம அபிவிருத்தி சங்கங்கள், சன சமூக நிலையங்கள் தங்கள் இடங்களில் கோழி நோய்த்தடுப்பு ஊசி போடுவதற்கு முன் கூட்டியேஒழுங்கு எசய்யும் பட்சத்தில் அங்கு சென்று ஊசி போடப்படும் என்று அவர் தெரிவித்தார்,

அண்மையில் சுதுமலை, வடலியடைப்பு, நவாலி ஆகிய இடங்களில் இவ்வாறுகோழிகளுக்கு ஊசி போடப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (13)

# மட்டு. மாநகரசபையின் வாடிவீட்டுஉடமை அபகரிப்பு

மட்டு. மாநகரசபைக்குச் சொந்தமான வாடி வீட்டு உடமைகள் பல மாநகர சபையின் முன்னாள் அதிகாரி ஒருவரால் அபகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

வாடி வீட்டில் இருந்த குளிர்சாதனப் பெட்டிகள், பீங்கான் வகைகள் மற்றும் பெறுமதியான பொருட்கள் காணாமல் போய் உள்ளதாம். ஆனால் இந்தப் பொருள்கள் மாநகரசபை முன்னாள் அதிகாரி ஒருவரின் வீட்டிலேயே இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி மோசடிகளாலும், இந்திய இராணுவம் தளபாடங்களைச் சேதப்படுத்தியதாலும் வாடிவீட்டைத் தொடர்ந்து நடாத்த முடியாது உள்ளதாகவும், இதனால் மாநகர சபையின் வருமானம் வீழ்ச்சியடைந்துள்ளதாகவும் மாநகரசபை நிர்வாகம் தெரிவிக்கின்றது. (05)

வடக்கு கிழக்கு பகுதியில்

# குளங்களில் நீர்மட்டம் குறைவு; சிறுபோகச் செய்கை பாதிப்பு

இவ்வருட சிறுபோக நெற்செய்கைக்கு வடக்கு கிழக்குப் பகுதிகளில் உள்ள பல நெற்செய்கை நிலங்கள் பயன்படுத்தமுடியாத நிலை தோன்றியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வடக்குக் கிழக்குப் பகுதிகளில் உள்ள குளங்களில் நீர்த்தேக்கம் குறைவாக உள்ள காரணத்தினாலே மேற்படி நிலை தோன்றியுள்ளது.

வடக்குகிழக்கின் ஒவ்வொரு பகுதியிலும் உள்ள நீர்பாசனத்திட்டங்களிலும் ஒரு குறிப்பிட்டளவு விளைநிலமே விவசாயிகளுக்கு நெற்செய்கைக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

கடந்த மாரிகாலத்தில் மழைவீழ்ச்சி குறைவான காரணத்தினாலேகுளங்களில் நீர்த்தேக்கம் குறைந்துள்ளது.

கடந்த பல வருடங்களாக இந்தநிலைதோன்றிவருவதால் சிறுபோகத்தில் விவசாயிகள் நஷ்டமடைந்து வருவதாக தெரிவிக்கப் படுகின்றது. (03)

சுங்க அதிகாரிகளின் சோதனையில்

## 7 தங்க பிஸ்கட்டுகள் யாழ். மெயில் ரயிலில் மீட்பு

சுங்க அதிகாரிகட்கு, வெளியில் டிமிக்கி காட்டியவர், புகைவண்டியில் தங்கப்பாளங்களுடன் கைது செய்யப்பட்டார்.

யாழ்ப்பாண இரவு மெயிலில் பயணம்செய்ய கொழும்பு கோட்டையில் ஏறி அமர்ந்திருந்தவேளையில் திடுதிப்பென அப் பெட்டியில் ஏறிய சுங்க அதிகாரிகள் அவரை மடக்கிப் பிடித்துக் கொண்டனர்.

அவரிடம் இருந்த பொதிகள் பரிசோதிக்கப்பட்டபோது ஏழு தங்கப் பிஸ்கட்டுகள் வெளியே எடுக்கப்பட்டன. அவை 5 லட்சம் பெறுமானமுடையவை என மதிப்பிடப்பட்டன. (37)

## பூநகரியில் மேதினக்கூட்டம்

கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கத்தின் பூநகரிக்கிளையின் மேதினப் பொதுக்கூட்டம் முதலாம் திகதி காலை 9.30 மணிக்கு பூநகரி ப.நோ,கூ. சங்க பிரதம அலுவலகத்தில் இடம் பெறவுள்ளது.

கூ.ஊ.தொ.சங்க பூநகரிக் கிளைத்தலைவர் ச.விஜயரத்தினம் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் செயலாளர் ந.கிஸ்ணபவன் மற்றும் தி.இராசநாயகம்,க. பஞ்சலிங்கம்.பொ.தங்கராசா,ந. பாலசுப்பிரமணியம் .இ, செல்வராசாஉட்படபலர் உரையாற்றுவர்.

## வேலணையில் குடிநீர் வழங்கல் முக்கிய ஆலோசனைக்கூட்டம்

(வேலணை)

வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் சகல மக்களுக்கும் போதிய அளவு குடிநீர் கிடைக்கச் செய்வதற்கான ஒன்றிணைந்த செயற்திட்டம் தயாரிப்பதற்கான ஆலோசனைக்கூட்டமொன்று எதிர்வரும் 3ம் திகதி வியாழக்கிழமை காலை வேலணை உதவி அரசாங்க அதிபரினது பணிமனையில் நடைபெறவிருக்கின்றது.

வேலணை உதவி அரசாங்க அதிபர் காரியாலய நிர்வாக அதிகாரி திரு. நாகலிங்கம் தனபாலசிங்கம் தலைமையில் நடைபெறவிருக்கும் இந்தச் செயற்திட்டத் தயாரிப்புக் கூட்டத்தில் பல்கலைக் கழகத்தில் உள்ள பேராசிரியர்கள், யாழ். மாவட்டத்தில் உள்ள பல திணைக்களங்களில் கடமையாற்றும் பல தகுதி வாய்ந்த நிபுணர்கள், அதிகாரிகள், மற்றும் பொது நிறுவனங்களைச் சேர்ந்த பிரதிநிதிகளும் பங்குபற்றி ஆலோசனைகளை வழங்கவுள்ளனர். (19)

## காரைநகர் பலகாடு பாதிபுற்றோர் சங்கம்

காரைநகர் பல காட்டில் வன்செயலால் பாதிப்புற்றோர் சங்கம் ஒன்று அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி சங்கத்தில் கீழ்க் கண்டோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: என், கணேச பிள்ளை, உப தலைவர்: திரு. பொ. கணேசன், செயலாளர்: திரு. ஆ. துரையப்பா, உப செயலாளர்: திரு. வே. பொன்னுத்துரை, பொருளாளர்: திரு. வே. தேவராசா.

அறுவர் குழு அங்கத்தவர்களாகத் தெரிவு செய்யப்பட்டார்கள்.

## நல்லூர் சமாஜ நிர்வாகிகள்

நல்லூர் பிரதேச அபிவிருத்திச் சபைக்கு உட்பட்ட சனசமூக நிலையங்களின் சமாஜப் பொதுக் கூட்டம்கொக்குவில் வளர்மதி சனசமூக நிலையத்தில் நடைபெற்றது. திரு. செ.சண்முகலிங்கம்தலைமையில்நடைபெற்றமேற்படிக்கூட்டத்தில் பின்வருவோர் நடப்பாண்டு நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப் பட்டனர்.

தலைவர் சு. சுந்தரலிங்கம் உப தலைவர் செ. சண்முகலிங்கம் செயலாளர் வி. பூபாலப்பிள்ளை உப செயலாளர் எஸ். முதலி, தனாதிகாரி க. சிவஞானம், கணக்காய்வாளர் சின்னையா உட்பட பத்துப்பேர் கொண்ட நிர்வாகக் கமிட்டியும் தெரிவு செய்யப்பட்டது. (41)

## பரு- ஆழியவளை வீதித்திருத்தம்

வடமராட்சி கிழக்கின் மிக நீண்ட வீதியான பருத்தித்துறை- ஆழியவளை வீதியை திருத்தும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஆனால் இந்தவீதி செப்பனிடும் முறையில் பல குறைபாடுகள் இருப்பதாக பொது மக்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

இவ்வீதியினைத் திருத்துவதற்கு உலகவங்கி 21 மில்லியன் ரூபாவை ஒதுக்கியது குறிப்பிடத்தக்கது.

தற்போது செப்பனிடுவதற்கு பயன்படுத்தப்படும் மண் தரமற்றது எனவும் காற்றினாலும் மழையினாலும் அள்ளிச் செல்லப்படும் நிலையில் இருப்பதாகவும் பொது மக்கள் புகார் தெரிவித்துள்ளனர். (43)

## சுவையான செய்திகள்

### திறமை தந்த தண்டனை

கஸாக் நகரைக் கைப்பற்ற எட்டு நாட்கள் போரிட்டதை நினைவுகூரும் பொருட்டு மாஸ்கோவில்செயின்ட் பாசில் கதீட்ரல் எட்டுத் தூபி மாடங்களுடன் கட்டப் பட்டது. இது போன்ற அழகிய கட்டிடத்தை வேறு எங்கும், எவரும் கட்டக் கூடாது என்பதற்காக, இதைக் கட்டிய கலைஞர்களான பர்ன, போஸ்தனி ஆகிய இருவரின் நாக்கு, கண்கள் மற்றும் கைகளைத் துண்டித்து விட்டார்கள்.

### பகல் சாப்பாடு 14 கோழி....

ஆல்பர்ட் பெமிக்ஸ் என்பவருக்கு வயது 32. இவருடைய எடை 394 கிலோ. இவருடைய ஒரு வேளைச் சாப்பாடு 56 நபர்களின் சாப்பாட்டிற்குச் சமன். பகல் நேரச் சாப்பாட்டிற்கு 14 கோழிகள், 80 போத்தல் பியர், 16 போத்தல் வயின் தேவையாம். விமானத்தில் போகும் போது 6 பேர் இருக்க வேண்டிய இடங்களை இவருக்கு ஒதுக்கி விடுகின்றனர். இது மட்டுமல்ல விமான நிலையக் கடையில் உள்ள சகல உணவு வகைகளும் இவருக்கு இரையாகி விடுகின்றனவாம். இவர் இந்த உணவுப் பழக்கத்தை விடவில்லை என்றால் விரைவில் வெடித்து விடுவாராம்.

### ஆலயத்தில் அணுசக்திகடிகாரம்

மேற்கு ஜேர்மனியில் உள்ள மாதா கோவில்களில் உள்ள கடிகாரங்கள் அனைத்தும் வேறு வேறு நேரங்களைக் காட்டிக்கொண்டிருந்தன. அதன் விளைவாக மத குருமார்கள் ஒரே நேரத்தில் பிரார்த்தனைகளைச் செய்ய முடியவில்லை. எனவே இதைத்தடுக்க எல்லாக் கோவில்களிலும் சரியான நேரம் காட்டும் சிறப்பு மிக்க கடிகாரங்களை இப்போது பொருத்தியுள்ளார்கள். ‘புருன்ஸ்விக்’ என்ற இடத்திலுள்ள அணுசக்தி கடிகாரத்துடன் மற்றக் கடிகாரங்கள் இணைக்கப்பட்டுள்ளன. ரேடியோ மற்றும் ரிமோட் கொண்ரோல் உதவியில் இயங்கும் இந்த அணுசக்திக் கடிகாரங்கள் பத்து இலட்சம் ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் ஒரு நிமிடம் கூடுதலாகவோ குறைவாகவோ நேரம் காட்டுமாம்.

## முரசொலிக்கு வந்த கடிதம்

### தமிழ்த்தின விழா தெரிவில் பல தில்லு முல்லுகள்

ஆசிரியர்
முரசொலி

தமிழ்த்தினவிழா 18.04.90 அன்று யாழ் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்றது. இப்போட்டியில் நடைபெற்ற இசைப்போட்டி, இசைப்பொதுபோட்டியில் பல தில்லு முல்லுகள் நடைபெற்றன. அனுபவம் குறைந்த சிலநடுவர்களின்தீர்ப்பு மாணவர்கள் மத்தியிலும் அவர்களின் ஆசிரியர்களின் மத்தியிலும் பல ஏமாற்றத்தை விளைவித்துள்ளன

எடுத்துக் காட்டாகப் பொதுப் பிரிவில் நடைபெற்ற வில்லுப்பாட்டு நிகழ்ச்சி இசைப்பிரிவில் நடைபெற்ற இசை நிகழ்ச்சியின் தீர்ப்புக்கள் பிள்ளைகளுக்கும் அதனுடன் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களுக்கும் ஏமாற்றத்தையும் வியப்பையும் ஏற்படுத்தியுள்ளன. இவ் அநீதியான தீர்ப்பு இனிமேல் சிறந்த கலையுணர்வும் திறனும் படைத்த பிள்ளைகளை இசைத்துறையில் ஈடுபடுத்தப் பெரும் தடைகளாக அமைந்துள்ளது எனக் கலையுலகின் சார்பில் அறியத்தருகிறோம்.

மல்லாகம் — க.அமரசிங்கம்

பி.கு:- இவ்விடயம் சம்பந்தமாக நல்லூர் என். அனுஷாந்தினி, கோப்பாய்-ஆர்.தேவராஜன், சரசாலை-எஸ்.வினோபிரியா ஆகியோரின் கடிதங்களும் எமக்குக் கிடைக்கப் பெற்றன.

### குளிக்குமிடம் குடிக்குமிடமாகிறது தடுக்க நடவடிக்கை அவசியம்

ஆசிரியர்
முரசொலி.

காரைநகரில் ஈழத்து சிதம்பர தேவஸ்தானத்து தீர்த்தக் கரையாக விளங்கும் கடற்கரை, அதாவது கசூரினாபீச் தற்சமயம் குளித்து கும்மாளம் அடிப்பதற்கு பதிலாக, குடித்து கும்மாளம் அடிக்கிறது. அருகாமையில் அமைந்திருக்கும் உலகமே போற்றும் அந்த ஈழத்து சிதம்பரத்தின் புனிதத்தன்மை இதனால் கெடுகிறது. இதேபோல் கீரிமலை கடற்கரை பற்றி முரசொலியில் செய்தி வெளி வந்ததை யடுத்து சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கையை அடுத்து, இப்போது சீர் செய்யப் பட்ட பின்பு, காரைநகர் கசூரினா பீச் புனிதத் தன்மை கெடுவதை பார்த்துக் கொண்டிருக்கலாமா?

காரைநகர். — ரி.தர்மன்

## “இளைஞர்கள் சமுதாயத்தினை கட்டியெழுப்பும் சிற்பிகள்”

(சித்தன்கேணி)

இன்றைய இளைஞர்களே எதிர்காலச்சமுதாயத்தினைக் கட்டிஎழுப்பும் சிற்பிகளாக விளங்குகின்றனர். இளைஞர்கள் தமது பொறுப்புக்களை உணர்ந்து செயற்படவேண்டும். தமது சமூகத்தினை பல வழிகளிலும் அபிவிருத்தி செய்ய இவ்வாறான இளைஞர் சமூககலாசார அபிவிருத்திக் கழகங்களை ஆரம்பித்து நடாத்த வேண்டும். பலதுறைகளிலும் நாட்டஞ் செலுத்தி அவற்றில்முன்னேறவேண்டும்.

வட்டுக்கோட்டை இளைஞர் சமூக கலாசார அபிவிருத்திக் கழகத்தின் நட்புறவு ஒன்று கூடல் வைபவத்திலும் தேநீர் விருந்திலும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியர் திரு.டேவிற் தம்பிராசா மேற்கண்டவாறு கூறினார்.

கழகத்தலைவர் சி.சிறிதரன் தலைமையில் இவ்வைபவம் நடைபெற்றது.

சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட வட்டுக்கோட்டை சிவன் கோவிலடி பிரஜைகள் குழுத் தலைவர் திரு. ச. சின்னப்பாபிள்ளை உரையாற்றும்போது ‘‘இளைஞர்கள் சமூகத்திலே நல்லொழுக்கமுள்ளவர்களாக வாழ்ந்து காட்ட வேண்டும்.’’

## புங்குடுதீவு பகுதியில் கொள்ளைசம்பவங்கள் அதிகரிப்பு

புங்குடுதீவு பகுதியில் கடந்த சில நாட்களாக சிறு சிறு கொள்ளைச் சம்பவங்கள் நடைபெற்றுவருகின்றன.

மேலும் புங்குடுதீவு இரண்டாம் வட்டாரத்திலுள்ள சங்கக்கடை ஒன்று உடைக்கப்பட்டு அங்கிருந்து பெறுமதி வாய்ந்த பொருட்கள் கொள்ளையடித்துச் செல்லப் பட்டுள்ளது.

அத்தியாவசியப் பொருட்கள் குழந்தைகளுக்கான பால் மாபக்கற்றுக்கள்உட்படசுமார் ஏழாயிரம் ரூபாவிற்கு மேற் பெறுமதிமிக்க பொருட்கள் கொள்ளை போனதாக கூறப் படுகிறது.

இச்சம்பவம் கடந்த சனி இரவு நடைபெற்றுள்ளது.

புங்குடுதீவு கிழக்குப்பகுதியிலுள்ள பல சரக்கு கடையொன்றிலும் இதற்கு முன்னர் கொள்ளைச்சம்பவம் ஒன்று இடம் பெற்றிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. 20)

## வடமராட்சியில் வீதி விபத்துக்கள்

வடமராட்சிப் பகுதியில் வீதி விபத்துக்களின் எண்ணிக்கைஅதிகரித்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது நேற்றைய தினம் வல்வெட்டித்துறை பிரதானவீதியில் மோட்டார் சைக்கிள் மோதியதால் வி.சின்னத்தம்பி என்ற 70 வயது முதியவர் படுகாயமடைந்தார்.(22)

## கிழக்கின் எல்லைப் பகுதிகளில் இன்றைய நிலைவரம் என்ன?

# கெவிளியா மடுவிலிருந்து வெளியேறிய தமிழர்கள்

# மீண்டும் அங்கு பாதுகாப்புடன் வாழ வழி செய்யப்படுமா?

கிழக்கில் எரியும் பிரச்சினைகளில் ஒன்று திட்டமிட்ட சிங்களக் குடியேற்றமும், தமிழர்கள் கிழக்கு மாகாணஎல்லைப் பிரதேசங்களை விட்டு அகதிகளாக வெளியேறுவதுமாகும்.

கிழக்கு மாகாணத்தில் அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களில் சிங்கள பெரும்பான்மை ஆதிக்கம்அதிகரித்த வேகத்திற்கு மட்டக்களப்பு மாவட்டத்தில் சிங்களக்குடியேற்றம் நடைபெறவில்லையாயினும், எல்லைக் கிராமங்களில்தமிழர்கள்அகதிகளாக்கப்பட்டு... வெளியேற்றப்பட்டபோது அப்பகுதிகளில் சிங்களவர்கள் குடியேறி அப்பகுதியை ஆக்கிரமித்து வரும் சம்பவங்கள் அதிகம்.

அத்தகைய எல்லைக் கிராமங்களில் ஒன்றுதான் கெவிளியாமடு: மகா ஓயாவிலிருந்து அம்பாறை செல்லும் பிரதான வீதியை அண்மித்த இக் கெவிளியாமடு பிரதேசம் வயல் வெளிகளும், நீர்வளமும் மிக்க பிரதேசம்.

காலம் காலமாக தமிழர்கள் வாழ்ந்த இந்த பூமியிலிருந்து அவர்கள் அகதிகளாக்கப்பட்டிருக்கிறார்கள்.

1965 ம் ஆண்டுக்குப் பின்னர் சுமார் 5 வன்செயல்களில் இக்கிராம மக்கள் தாக்கப்பட்டனர்.

ஆயுதப் படையின் உதவியுடன் காலத்துக்குக் காலம் சிங்கள பேரினவாதத்தால் தாக்கப்பட்ட இம் மக்கள் 1983 ம் ஆண்டிலும், 1985 ம் ஆண்டிலும் மிகக் கொடூரமாகத் தாக்கப்பட்டார்கள்.

சுமார் 15 க்கும் மேற்பட்ட தமிழர்கள் வெட்டிக் கொலை செய்யப்பட்டனர். இரவோடு இரவாக இவர்களின் வீடுகள் உடைக்கப்பட்டன. உடைமைகள் சூறையாடப்பட்டன.

அனைத்துமே இழந்த நிலையில் அகதிகளாக சுமார் 250 குடும்பங்கள் கெவிளியாமடுவிலிருந்து 15 மைல் அப்பாலுள்ள மாவடி முன் மாதிரி கிராமத்தில் தஞ்சம் அடைந்தனர்.

சுமார் 5 ஆண்டுகள் அகதிகளாகவே அரச உதவி எதுவுமின்றி வாழும் இவர்களின் பிரச்சனைகள் குறித்துஆராய்வதற்காகவும், கெவ்ளியாமடு பிரதேசத்தை பார்வையிடுவதற்காகவும், மட்.அரசாங்க அதிபர் திரு.ஆர்.யோகநாதன் தலைமையில்வடகிழக் மாகாண பெருந்தெருக்கள் திணைக்கள பணிப்பாளர் திரு.ஜஸ்ரின் இராசேந்திரம் புனர்வாழ்வு திட்ட பணிப்பாளர் திரு. ஆர்.தியாகராசா திட்டமிடல் உதவிப்பணிப்பாளர் திரு. செல்வின் சமூக சேவைகள் உதவிப்பணிப்பாளர் திரு.ஜெயராம், பட்டிப்பளை உதவி அரசாங்க அதிபர் திரு.சாமித்தம்பி உட்பட அரசாங்க திணைக்கள உயர் அதிகாரிகளும், விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி பிரதித் தலைவர் திரு. கரிகாலன் தலைமையில் விடுதலைப் புலிகளின் புனர்வாழ்வு அபிவிருத்தி பொறுப்பாளர் திரு.டேவிட், அரசியற் பிரிவைச் சேர்ந்ததிரு.தம்பிராசா, திரு.நவாஸ் ஆகியோரும் அப்பகுதிக்குச்சென்றனர்

இவர்களுடன் பத்திரிகையாளர்களும் அழைத்து செல்லப்பட்டனர். மாவடி முன்மாரி கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் அகதிகளாக தங்கியிருக்கும் அகதிகள் தமது பிரச்சனைகளை அரசாங்க அதிபரிடம் எடுத்துக் கூறினார்.

அப்பகுதியில் கிராமசேவை உத்தியோகத்தராக கடமையாற்றிவரும் திரு.இன்பராசா இந்த அகதிகளின் அவலநிலை பற்றி தெளிவாக எடுத்து விளக்கினார்.

1983ம் ஆண்டிலும், 1985ம் ஆண்டிலும் இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்ட இம்மக்களுக்கு அரசு எந்தவித உதவியையும் வழங்கவிலலை.

5 ஆண்டுகளாகஅகதிகளாக இருக்கும் இந்த250 குடும்பங்களுக்கும் எந்த விதவசதியையும் அரசாங்கம்செய்துகொடுக்க விலலை. அனாதைகளாகவேஇவர்கள்வாழ்ந்துவருகின்றார்கள்.

கெவிளியாமடு பகுதியில் அம்பாறைஅரசாங்கஅதிபரின் மேறபார்வையில் வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையால 55 வீடுகள் கட்டப்பட்டு சிங்களவருக்கு வழங்கப்பட்டு இருக்கிறது. மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த பிரதேசத்தில் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் எப்படி சிங்களவர்களை குடியமர்த்த முடியும்?

எமது மக்கள் அப்பகுதியில் வாழக்கூடாது, குடியிருக்கக்கூடாது என்பதற்காக திட்டமிட்டு சிங்களக் குடியேற்றம் நடைபெறுகிறது. இந்த சிங்கள குடியேறற வாசிகளுக்கு இலங்கை இராணுவமும், அதிரடிப்படையும் முகாமிட்டு பாதுகாப்பு வழங்கிவருகின்றது.

கெவிளியாமடு தமிழ்ப் பாடசாலை மூடப்பட்டு சிங்கள குடியேற்ற வாசிகளை பாதுகாப்பதறகாக அதில் இலங்கை இராணுவம் முகாமிட்டிருக்கிறது.

தமிழ் மக்கள் அங்கு மீண்டும்குடியேற்றுவதற்குரியபாதுகாப்பு உறுதிப் படுத்தப்பட வேண்டும் என கிராமசேவை உத்தியோகத்தர் திரு. இன்பராசா தெரிவித்தார்.

இப்பகுதியின் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் திரு. மகேஸ்வரலிங்கம் அகதிகள் நிலைமைபற்றி குறிப்பிடுகையில :- பிரதேச பற்றோடு வாழ்பவர்கள் இந்த எலலைப் பிரதேச மக்கள் தான்.

கெவிளியாமடு பகுதியிலிருந்துமட்டக்களப்புநகருக்கோ அலலது ஏனைய தமிழ் கிராமங்களுக்கோ நேரடியாக செல்லக் கூடிய பாதைகள் இல்லை இனக் கலவரத்தால் பாதிக்கப்பட்ட வேளையில் சிங்கள கிராமங்களின் ஊடாகத்தான் வர முடிந்தது. இந்த அகதிகளை மீள குடியேற்ற முயற்சிக்கும் அதே வேளை அவர்களுக்குரிய போக்குவரத்து வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும்.

அடிப்படைத் தேவைகளான கல்வி, சுகாதார வசதிகள் இன்றியே இவர்கள் வாழ்ந்து வருகின்றார்கள், என குறிப்பிட்டார்.

இங்கு முக்கியமாக இரண்டு பிரச்சனைகளை அகதிகள் எதிர்நோக்கின்றனர் என்பது தெளிவாகியது.

ஒன்று அவர்களின் பாதுகாப்பு, மற்றது அவர்களை உரியமுறையில் குடியேற்றி புனர்வாழ்வழிப்பது.

பாதுகாப்புப் பிரச்சனை பற்றி விடுதலைப்புலிகளின் பிரதித் தலைவர் திரு. கரிகாலன் குறிப்பிடுகையில்

எல்லைப் பகுதிக் கிராமங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் நாம் மிக விழிப்பாக இருக்கிறோம்.

அரசாங்க அதிபருக்கு தெரியாமல் இந்த மாவட்டத்தில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் நடைபெறுவது பற்றிஜனாதிபதியுடன் நடந்த பேச்சுவார்த்தையின் போது சுட்டிக்காட்டியிருந்தோம்.

கெவிளியாமடு பகுதியில் மீண்டும் தமிழர்கள் குடியேறுவற்தகுரிய பாதுகாப்புகளை நாம் விரைவில் உறுதிசெய்வோம். எல்லைக்கிராமங்களில் இருக்கும் மக்கள் எதிர்காலத்தில் ஒற்றுமையுடன் அந்தப் பகுதிகளை விட்டு வெளியேறாது இருக்க வேண்டும். உதாரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தின் மேற்கு எல்லைக் கிராமமான மன்னம்பிட்டி தமிழ் கிராமத்திலிருந்த தமிழர்களை வெளியேற்றிவிட்டு அப்பகுதியில் ஒரு நவீன நகரை அமைத்து அதில் சிங்களவர்களை குடியேற்ற அரசாங்கம் முயற்சித்த வேளையில் மன்னம்பிட்டி தமிழ் மக்கள் தமது தாயக பூமியை விட்டு வேளியேறாது உறுதியோடு இருந்தனர். இதனால் இத்திட்டம் கைவிடப்பட்டு இக் குடியேற்றம் வேறு ஒரு இடத்திற்கு மாற்றப்பட்டது.

வடக்குக் கிழக்கு மாகாண எல்லைக் கிராமங்களில் திட்டமிட்ட குடியேற்றங்கள் தொடர்பாகவே நாம் ஜனாதிபதியுடன் முக்கியமாக பேசுகின்றோம்.

**இ. துரைரத்தினம்**
**(மட்டுநகர்நிருபர்)**

காலப்போக்கில் நிச்சயம் எமது எல்லைக் கிராமங்களை பாதுகாக்க நாம் உறுதியான ஒரு நடவடிக்கை எடுப்போம் என்றார்.

புனர்வாழ்வு தொடர்பாக மட்டக்களப்பு அரசாங்க அதிபர் திரு. ஆர். யோகநாதன் குறிப்பிடுகையில் இடம்பெயர்ந்தவர்களுக்கான புனர்வாழ்வுக் கொடுப்பனவு தொழில் மீள ஆரம்பிப்பதற்கான கொடுப்பனவு என்பவற்றை இவர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுப்பதாகவும். இவர்களுக்கு வீடமைப்பு திட்டம் ஒன்றை உருவாக்கி வீட்டு வசதி செய்து கொடுப்பதாகவும் உறுதியளித்தார்.

நடமாடும் வைத்தியசாலை ஒன்றை நடாத்துவதற்கும் தாம் ஒழுங்குகளை மேற்கொள்வதாக அரச அதிபர் தெரிவித்தார்.

இதனையடுத்து அரச அதிபர், அதிகாரிகள், விடுதலைப் புலிகள் பிரதிநிதிகள், பத்திரிகையாளர்கள், கெவிளியாமடுவிலிருந்து வெளியேறிய அகதிகள் பிரதிநிதிகள் ஆகியோர் கெவிளியாமடுப் பகுதியைப் பார்வையிடுவதற்காக மாவடி முன்மாரி கிராமத்திலிருந்து புறப்பட்டனர்.

மாவடி முன்மாரிக் கிராமத்திலிருந்து சுமார் 10 மைல் எமது வாகனம் சென்றிருக்கும் . . . 19ம் கட்டை என்ற இடத்தில் ஒரு இராணுவ முகாம் காணப்பட்டது. தமிழ் பாடசாலை ஒன்று மூடப்பட்டு அதில் அம் முகாம் அமைக்கப்பட்டிருந்தது.

முன்னே சென்ற விடுதலைப் புலிகளின் வாகனம் நிறுத்தப்பட்டு அவர்கள் அந்த முகாமுக்குப் பொறுப்பான அதிகாரியிடம் பேசிக் கொண்டிருந்தனர்.

அந்த இராணுவ முகாமிலிருந்த இராணுவ வீரர் ஒருவர் எமது வாகனத்தை நெருங்கி வந்து எங்கேபோகின்றீர்கள் என வினாவினர்.

கெவிளியாமடு பகுதியில் இருந்த தமிழ் மக்கள் இப்போது மாவடி முன்மாரி கிராமத்தில்அகதிகளாக இருக்கிறார்கள். இந்த அகதிகளின் சொந்த இடத்தைப் பார்க்கப் போகின்றோம் என எமது வாகனத்தில் வந்த ஒருவர் விளக்கம் அளித்தார்.

''உண்மையாகவா'' எனக் கேட்டவாறு அந்த இராணுவ வீரர் எமது வாகனத்தை விட்டு நகர்ந்தார்.

அந்த இராணுவ முகாமில் அனுமதி பெற்ற பின் அங்கிருந்து வாகனங்கள் புறப்பட்டன.

தெருவோரங்களிலும், உள் பகுதிகளிலும் பல குடியிருப்புகள் ஏற்படுத்தப் பட்டிருந்தன.

வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையால் அமைக்கப்பட்ட வீடுகளையும் நாம் கண்டோம். இவை அம்பாறை மாவட்ட வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையால் அமைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு பிரதேசத்தில் எப்படி இன்னொரு மாவட்ட அரசாங்க அதிபரின் பணிப்பில் வீடமைப்புத் திட்டங்களை உருவாக்க முடியும்?

மட்டக்கனப்பு மாவட்ட எல்லைக்குள் வரும் இப்பகுதிகளை இப்போது அம்பாறை மாவட்டத்திற்குள்சேர்ப்பதற்கான முயற்சியில் இதுவும் ஒன்று என்பதை நாம் நேரில் காணக்கூடியதாக இருந்தது.

வாய்க்கால்கள் செப்பனிடப்பட்டு சிங்களக் குடியேற்ற வாசிகள் விவசாய வேலைகளில் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். அந்த குடியேற்ற வாசிகளான சிங்கள மக்கள் எமது வாகனங்களை ஆச்சரியத்தோடு ஒருவித பய உணர்வோடும் பார்த்துக் கொண்டிருந்தார்.

சுமார் பன்னிரண்டு மணியளவில் கெவிளியாமடு பகுதியை அடைந்தோம். எம்முடன் வந்த அந்த பகுதியைச் சேர்ந்த அகதிகள் தாம் வசித்த இடங்களை அதிகாரிகளுக்கு காட்டினர். அது நான் வைத்த தென்னை மரம், இப்ப நல்லாக் காய் போட்டிருக்கு, எனக்கு அருகில் நின்ற ஒரு இளைஞன் குறிப்பிட்டான்.

அந்தப் பகுதியில் கட்டப்பட்டிருந்த தமிழர்களின் வீடுகள் அனைத்தும் இடிக்கப்பட்டு பொருள்கள் எல்லாம் சூறையாடப் பட்டிருந்தன. அத்திவாரங்கள் மட்டும் புற்களால் மூடப்பட்ட நிலையில் காணப்பட்டன. தமிழர்களின் விவசாய நிலங்கள் சிங்களவர்களால் செய்கை பண்ணப் படுவதை காண முடிந்தது.

தமிழர்களால் நடப்பட்ட தென்னை மரங்கள் இப்போது நல்ல பலனை கொடுக்கிறது. அந்தப் பலனைப்பெற அங்கு தமிழர்கள் இல்லை. எங்கிருந்தோ வந்து குடியேறிய சிங்களவர்கள்தான் அந்தப்பலனைப் பெறும் வாய்ப்பை பெற்றிருக்கிறார்கள்.

கெவிளியாமடுவில் பிறந்து .. வளர்ந்து .. இன்று அகதிகளாக மாவடி முன்மாரி கிராமத்தில் அகதியாக இருக்கும் கணபதிப்பிள்ளை செல்வநாயகம் என்ற இருபத்தினான்கு வயது இளைஞர் தான் வாழ்ந்த அந்த தாயக பூமியை ஏக்கத்தோடு பார்த்துக்கொண்டிருந்தார்.

அந்த இளைஞர் சொன்னார் நாங்கள் ஐந்து வருடமாக அகதியாக இருக்கிறம், ஆனால் அரசாங்கத்திடம் அரிசியை எதிர்பார்த்தோ, நிவாரண உதவியை எதிர்பார்த்தோ அல்ல. நாம் எதிர்பார்ப்பதெல்லாம் எமது தாயக பூமியில் நாம் குடியிருப்பதற்கான பாதுகாப்புத் தான்.

நாம் தொடர்ந்து அகதியாக இருக்க விரும்பவில்லை இந்த பூமியை விட்டிட்டு... எங்கட பூமியில வேற ஒரு இனத்தவன் ஆதிக்கம் செலுத்துவதை எங்களால பொறுத்துக்கொண்டிருக்கேலாது.

அப்படியானால் நீங்கள் இங்கு வந்து மீண்டும் குடியேறலாம்தானே என நான் கேட்டபோது அந்த இளைஞன் சொன்னான், ''இப்ப குடியிருக்கிறசிங்களவர்களுக்கு இலங்கை இராணுவம்...பாதுகாப்பு வழங்குது. நாங்கள் வந்து இங்கை இருந்தால்... ஏதாவது பிரச்சனை வாறபோது இந்த இராணுவத்தால் நாம்தாக்கப்படுவோம். நாங்கள்இங்கைவந்துகுடியேறுவதாக இருந்தால் இந்த இராணுவ முகாம் அகற்றப்பட வேண்டும். நாங்கள் பாதுகாப்பு இல்லாமல் எப்படி ..? அந்த இளைஞரிடம் நியாயம் தெரிந்தது.

பத்தொன்பதாம் கட்டை கிராமத்தில் தமிழ்ப் பாடசாலையில் அமைக்கப்பட்டிருக்கும் இராணுவ முகாம் இருக்கும்வரை சிங்களக் குடியேற்றம் அப்பகுதியில் மிகவேகமாக நடைபெறும் என்பது உண்மை.

தமிழ் மக்கள் பாதுகாப்பாக வாழவும், சிங்களக் குடியேற்றத்தை தடுப்பதற்கும் முதல் எடுக்கவேண்டிய நடவடிக்கை பத்தொன்பதாம் கட்டை கிராமத்தில் அமைக்கப்பட்டிருக்கும் இலங்கை இராணுவ முகாம் மூடப்பட வேண்டும்.

எல்லைப்பகுதிகளில் வாழும் மக்கள் எமது பிரதேசங்களை காப்பதற்காக செய்யும் தியாகங்களை... படும் துன்பங்களை நேரில் பார்த்த அனுபவத்தோடு நாம் மட்டுநகர் திரும்பினோம்.

---

**நமது அன்றாட . . .**

இவ்வாறு பிள்ளைகளை குடும்ப வாழ்க்கையில் பங்கேற்க வைப்பது ஒரு பல்பக்க அணுகு முறை. திட்டமிட்டு ஒழுங்காக செயற்படுமிடத்து வழமான, ஆரோக்கியமான ஒரு எதிர்காலத்தை தமது பிள்ளைகளுக்கு பெற்றோர் அமைத்து கொடுக்க முடியும். பிள்ளைகள் — இல்லறமாம் கோவிலுக்குத் தீபங்கள்.

## சர்வோதய தலைவரின் யாழ் விஜயம் பின்போடப்பட்டது

சர்வோதய தலைவர் கலாநிதி ஏ. ரி. ஆரியரத்தினாவின் யாழ் விஜயம் பின்போடப்பட்டதாக வவுனியாவில் சர்வோதயத்துடன் தொடர்புடைய வட்டாரங்கள் கூறின.

மே 2 ம் திகதி இவர் தனது யாழ்ப்பாண விஜயத்தினை மேற்கொள்ள திட்டமிட்டிருந்தார் என அவ்வட்டாரங்கள் மேலும் கூறின.

அதேவேளை எதிர்வரும் மே 10-ம் திகதி வியாழக்கிழமை வவுனியாவில் இடம் பெறும்.

இனங்களுக்கிடையிலான சமாதான ஊர்வலத்தில் கலாநிதி ஆரியரத்தினா கலந்து கொள்வார் என தெரிவிக்கப்பட்டது. (11)

## செயலக பிறப்பு சாட்சி பத்திரம் தவறுனதரவுகளுடன் விநியோகம்

யாழ்மாவட்ட செயலக பதிவாளர் அலுவலத்தினால் வழங்கப்பட்டு வரும் ஒரு சில பிறப்புச் சாட்சிப் பத்திரங்களில் தவறான தரவுகள் பதியப்பட்டு விநியோகிக்கப் படுவதாகதெரிவிக்கப்டுகிறது.

பிறந்த திகதிமற்றும் பிறந்த இடம், தந்தை, தாய் பெயர் என்பனவற்றில் மாறான தகவல்கள் பதியப்பட்டு வருகின்றது,

அண்மையில் 2522 இலக்க பிறப்புச் சாட்சிப் பத்திரத்தில் உண்மையான பிரதிக்கும் செயலகத்தில் எடுத்த பிரதிக்கும் வித்தியாசம் இருப்பது குறித்து புகார் தெரிவிக்கப் பட்டுள்ளது. (03)

## வடபிராந்திய சுகாதார சேவை திணைக்கள 1990 அபிவிருத்தி திட்டங்கள்

வடபிராந்திய சுகாதார சேவைத் திணைக்களத்தின் 1990ம் ஆண்டுக்குரிய அபிவிருத்தித் திட்டத்தில் அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் கோப்பாய் வைத்தியசாலையின் சுகாதார அதிகாரி விடுதியும், மந்திகை வைத்தியசாலையின் கிகிச்சைபறைக் கட்டடமும், வல்வெட்டித்துறை வைத்திய அதிகாரி விடுதியும் கோண்டாவில்வைத்தியசாலைஉதவி வைத்திய அதிகாரி விடுதியும், சாவகச்சேரி வைத்தியசாலை நீர்ப்பாசன கட்டிடமும், கசநோய் சிகிச்சைபிரிவுக்கட்டிடமும்அமைக்கப்படவுள்ளன.03

### யாழ்பலகலைக் கழக...

25 மாணவர்களை இவ்விவசாயபீடத்திற்கு சேர்த்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டது. எனினும் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் கட்டடவேலைகள் முடிவடைய அதிககாலம் எடுக்குமென எதிர்பார்க்கப்பட்டு வருதால் இம் மாணவர்கள் கட்டட வேலைகள் பூர்த்தியாகும் வரை யாழ். பல்கலைக் கழக கட்டடத்திலே பயிற்சி பெறுவார்கள், (03)

### வலிகாமம்...

பழையில் இருந்து காங்கேசன் வீதி, ஆஸ்பத்திரி வீதி, மின்சார நிலைய வீதி வழியாக யாழ் மத்திய கல்லூரியை அடையும் மேதின கூட்டம் ஐந்தரை மணியளவில் ஆரம்பமாகும்.

### மகோற்சவம்

வட்டுக்கோட்டை, அடைக்கலந் தோட்டம் சிறி கந்த சுவாமி கோயில் வருடாந்த மகோற்சவம் இன்று காலை 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. 08,05,90 (செவ்வாய்கிழமை) தேர்த்திருவிழாவும்,09.05.90 தீர்தோற்சவமும்நடைபெறும்.

### உணவு...

திக்குள் உணவுப்பொருட்களை சம்பந்தப்பட்டோர் பெற்றிருக்கவேண்டும் ஆனால் உணவு முத்திரை விநியோகம் பல கிராமசேவை அலுவலகர் பிரிவுகளில் ஆரம்பிக்கப்படவில்லை.

உணவு முத்திரை விநியோகம் முடிவடைந்து சம்பந்தப்பட்டோர் உணவுப் பொருட்களைப் பெறுவதற்குரிய கால அவகாசம் போதாதகாரணத்தினாலே மேற்படி கால எல்லை நீடிக்கப்படவுள்ளதாக தெரியவருகின்றது.

தற்போது உணவுமுத்திரை விநியோகத்தை விரைவாக மேற்கொள்ளப் படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (03)

## காலமானார்

### திருமதி பாக்கியம் முருகேசு

தும்பளை -பருத்தித்துறையைச் சேர்ந்தவரும், திரு. க. முருகேசுவின் (ஓய்வு பெற்ற தபாலக எழுதுவினைஞர் மனைவியும், காலஞ்சென்ற சேதர் இராமசாமி, காலஞ்சென்ற சேதர் சுப்பிரமணியம் திருமதி கனகம்மா வைரவிப்பிள்ளை, திருமதி புவனேஸ்வரி கதிரவேற்பிள்ளை ஆகியோரின் சகோதரியும், மனோன்மணி, (கக்சுயின் பல்கலைக் கழகம், யப்பான்) கமலமணி, தயாபரன் (சுங்க அதிகாரி, கொழும்பு) ஆகியோரின் தாயாரும், பேராசிரியர் அ. சண்முகதாஸ்(யாழ் பல்கலைக் கழகம்) ப. விக்னேஸ்வரன் (கடற்படை, கொழும்பு) வசந்தி தயாபரன் (இலங்கை வங்கி கொழும்பு) ஆகியோரின் மாமியாரும், கலைச்செல்வி திரு நங்கை, செந்தூரன் (இலண்டன்), ஆதவன், ஷர்மினி, சிறிரமணன், ஆகியோரின் பேத்தியுமான திருமதி மு. பாக்கியம் திருநெல்வேலியில் காலமானார். ஈமக்கிரியைகள், அம்பலவாணர் பாதை, திருநெல்வேலியில் 30 ம் திகதி (திங்கட்கிழமை) காலை 9 மணிக்கு நடைபெற்று, தகனக்கிரியைககளுக்காக பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்,

அம்பலவாணர் பாதை,
பலாலி வீதி, திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

மு. தயாபரன்

04267

# அதிபர் பதவி உயர்வு இன விகிதாசாரப் படி

அதிபர்தரம் Iஅதிபர்தரம்II ஆகியவற்றிற்கான பதவிஉயர்வுகள் இனவிகிதாசார அடிப்படையில் செய்யப்பட இருப்பதாக தெரியவருகிறது.

இன விகிதாசார அடிப்படையில் தமிழ் முஸ்லிம் ஆசிரியர்களுக்கு நியமனம்வழங்கப்படுமெனகல்விச்சேவை ஆணைக்குழுவின் தலைவர் திரு.ஜோர்ச் மெண்டிஸ் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச்செயலாளரிடம் தெரிவித்துள்ளார்.

இவ் அதிபர் தரங்களில் உள்ள வெற்றிடங்களில் 60 வீதமானவை நடைபெற்று முடிந்த பரீட்சைகளில் இருந்து தெரிவு செய்யப்படுவார்கள்.

அதிபர்தரம்I இற்குபோதிய அளவு தமிழ் முஸ்லிம் ஆசிரியர்கள் அழைக்கப்படுவதற்கு ஆவன செய்வதாகவும் உறுதி அளிக்கப்பட்டுளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அதிபர்தரம்IIஇற்கு போதிய விண்ணப்பதாரிகள் அழைக்கப்பட்டுள்ளதாகவும் அறியவருகிறது.

பரீட்சைமுடிவுகள் வெளியாகிய பின்னர் மிகுதி 40 வீதமான வெற்றிடங்கள் இனவிகிதாசாரஅடிப்படையில் அதிபர் தரம்II அதிபர்தரம்III ஆகியவற்றில் இருந்துஅடுத்தஅதிபர் தரத்திற்கு பதவிஉயர்வு வழங்குவதற்கு நேர்முகப்பரீ சைக்கு அழைக்கப்படுவார்க என இலங்கை தமிழர் ஆ யர்சங்கத்திடம் கல் சேவைத்தலைவர் உறுதிஅ திருப்பதாக அறிவிக்கப் கின்றது. (43)

### தமிழீழ...

குள்ள மீனவர்கள் படும் கஷ்டத்தை எடுத்து விளக்கி இப்படியான செயல்களில் ஈடுபடவேண்டாமெனக் கேட்டோம் ஆனால் அவர்கள் எமது வேண்டுகோளை மதியாது தொடர்ந்தும் மீன் வலைகளை அறுப்பதிலும் மீன்களை களவாடிச் செல்வதிலும் ஈடுபட்டு வந்தார்கள்.

இன்றும் மீன்வலைகளை அறுப்பதும், களவாடுவதும் தொடர்கின்றது அதுமட்டுமல்லாமல் எமது மீனவர்கள் கடலில் தாக்கப் படுகின்றார்கள். தமிழ்நாட்டில் எதிர்க்கட்சிகள் கூச்சலிடுவது போல நாம் யாரையும் இந்திய எல்லைக்குள் வந்து கூட்டிச் செலலவிலலை.

தமிழீழ மீனவர்கள் 83ஆம் ஆண்டு தொடக்கம் மீன் பிடிக்க முடியாமல தடுக்கப்பட்டார்கள். தடையை மீறி மீன்பிடிக்க சென்ற பலர் சிறிலங்கா கடற்படையால் சுடப்பட்டு இறந்துள்ளனர். 87ஆம் ஆண்டு இந்தியப்படை வந்த பின்பு மீனவர்கள் முழுமையாக மீன்பிடிக்கத் தடைசெய்யப்பட்டார்கள் சுடப்பட்டார்கள்.

இன்று 7 ஆண்டுகளின் பின் தமிழீழ மீனவர்கள் கடலில் மீன்பிடிக்கச் செல்கின்றார்கள். வங்கியிலும் மற்றும் தனிப்பட்டோரிடமும் கடன் பெற்று வலைகள் வாங்கி இவர்கள் மீன்பிடித்து வருகின்றார்கள்.

எமது மீனவர்கள் சிங்களப் படையால் கொல்லப்பட்டார்கள் மீன்பிடிக்க தடைசெய்யப்பட்டார்கள் இந்தியப் படையால் கொல்லப்பட்டார்கள் மீன்பிடிக்க தடைசெய்யப்பட்டார்கள். இன்று எமது சகோதர தமிழக மீவைர்களால் தொல்லைக்குள்ளாகின்றார்கள்.

இன்று பல ஆண்டுகளுக்குப் பின் எமது மீனவர்கள் மீன் பிடிக்கச் செல்கின்றார்கள் அவர்களின் கடந்தகால கஷ்டங்களை தமிழ் நாட்டு மீனவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

எமது மீனவர்களின் நிலைமையை புரிந்து தொடர்ந்து எமது மீனவர்களுக்கு எமது சகோதர தமிழக மீனவர்கள் தொல்லை கொடுக்காமல் இருக்க வேண்டும் என கேட்டுக் கொள்கின்றோம்.

### வெவ்வேறு உணவுபபொருளினால் உடல்நலம் பாதிப்

## பாடசாலை மதிய உணவாக ஒரேவகையான உணவுப்பொரு

பாடசாலை மதிய உணவுத் திட்டத்தில் ஒவ்வொருநாளும் ஒவ்வொருவகையான உணவு வழங்கப்படுவதால் மாணவர்கள் உடல்நலம் பாதிக்கப் படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

சோயா, கடலை, கௌப்பி, பணிஸ், பிஸ்கட், வாழை பழம் போன்உணவுப்பொரு களே வழங்கப்பட்டு வருகின் றன. ஒவ்வொருநாளும் ஒ வகையான உணவுப்பொரு களை வழங்குவது பற்றி த போது ஆலோசனை நடா தப்பட்டு வருகின்றது. (03

## மட்டுநகரில் சட்டவிரோத கட்டிடங்கள் அகற்றப்படும்

மட்டு மாநகரசபை எல்லைக்குள் சபையின் அனுமதி பெறாது கட்டப்படும் சட்ட விரோதகட்டிடங்கள்அனைத்தும் உடைக்கப்படும் என மட்டு மாநகரசபை ஆணையாளர் அறிவித்துள்ளார்.

மாநகரசபைப்பகுதியில் பல குடியிருப்பு வீடுகளும், வர்த்தக நிலையக் கட்டிடங்களும் மாநகர சபையின் அனுமதி பெறாது கட்டப்பட்டுள்ளது கண்டு பிடிக்கப் பட்டுள்ளது. இவை சட்ட விரோதமான கட்டிடமாகும் இந்த வீ களை அகற்றும் அதிகார மாநகர சபைக்கு உண்டு இவை அனைத்தும் உடைக் கப்படும் என அவர் தெரிவித் தார் (5)

## ரயில் நிலையத்திற்கு மின் வசதி

நீண்டகாலமாக மின்சார மின்றி குப்பி விளக்குகளால் முடங்கிப்போய்கிடந்தகோண்டாவில் ரயில் நிலையத்திற்கு மீண்டும் மின்சார இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதனால் இது நாள் வரை பல அசௌகரியங்களை பயணிகள் எதிர்நோக்கிவந்தார்கள், பொருந்தப்பட்டுள்ள மின்சாரம் தற்காலிகமானதே எனினும் நிரந்தர இணைப்புக்காண நடவடிக்கைகளை நிலைய அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றார்கள். (41)

## கிளிநொச்சி பதில் உதவி அரசஅதிபர்

கிளிநொச்சி மாவட்டபதி உதவி அரசாங்க அதிபரா (காணி) திரு.வி.எஸ் கனகர தினம் நியமிக்கப்பட்டு ளார்.

இவர் வடக்கு கிழக்கு மகாண சனபயின் உள்துறை அமை சின் உதவிச் செயலாளரா இதுவரை கடமைபுரிந்தார். (03)

## 54 கலைஞர் தெரிவு

இலங்கை ஒலிப்பரப்பு கூட் டுத்தாபனத்தின்தமிழ் சேவை நடத்திய வானொலி நாடகக் கலைஞர் தேர்வில் 54 கலை ஞர்கள் தெரிவு செய்யப்பட் டுள்ளனர்.

இவர்களில் 11 பேர் உரைச் சித்திரங்களில்பங்கேற்பதற்கும் ஏனையோர் வானொலி நாட கங்களில் பங்கேற்கவும் தெரி வாகியுள்ளனர்.

## வவுனியா மாவட்டத்தில் உழுந்து செய்கை ஆராய்ச்சி

வவுனியா மாவட்டத்தில் உழுந்து செய்கையின்தொழில் நுட்ப பொருளாதார முன்னேற்றத்துக்குரியகாரணங்கள் குறித்து விரிவான ஆராய்ச்சியை வவுனியா விவசாயக்கல் லூரிமாணவர்கள்மேற்கொண் டுள்ளனர்.

இத்தகவலை வவுனியா விவசாயக் கல்லூரி அ பர் திரு எஸ் ரராஜதுரை தெரிவித்துள்ளார்,

உளுந்துச் செய்கை பெரு ளவு மேற்கொள்ளம்படுகின்ற செட்டிக்குளம் பகுதிகிராமங்களுக்கு சென்றுள்ள மாணவர் கோவிடி நிலப்பண்பாடு மற்றும் உளுந்துச் செய்கையி தற்போது விவசாயிகள் கொண்டுவரும் செய்கைமுை என்பனகுறித்து ஆரய்ச்சிமே மேற்கொண்டுள்ளது.

### மே 5திற்குப்பின...

நா. சோதிநாதன் கிளிநொச்சி, அன்ரனி ஜெகநாதன் முல்லைத்தீவு எஸ். எஸ். கிலெம்ட் மன்னார் (43

### உலலாச...

யில் 25,684 பயணிகளை அழைத்து வந்துள்ளது.

ஹொங் கொங், மேற்கு ஜேர்மனி, ஜப்பான் பிரான்ஸ் ஆகிய நாட்டவரின் வரவு அதிகரித்துள்ளது எனவும் சுவிடன், நோர்வே ஆகிய நாடுகளிலிருந்து வருவோர் தொகை விழ்ச்சி அடைந்துள்ள தெனவும் உல்லாசப் பயணிச் சபையின் புள்ளி விபரங்கள் தெரிவித்துள்ளன.

## இந்தியப் படையால் நஷ்டம்

வாடி வீட்டு வாடகை, சுகாதாரசேவை செலவு, நீர்வரி மின் உபகரணங்களுக்கான கொள்வனவுப் பணம் என்ப வற்றால் இந்தியப் படையினா மட்டக்களப்புமாநகரசபைக்கு பல இலட்ச நஷ்டத்தை ஏற் டுத்தியிருப்பதாக தெரிவிக்க பட்டுள்ளது,

இடத்திக்கை முரசொலி பப்ளிஷர்ஸ்,[பிறைவேட்]லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாண ஸ்ரான்லி வீதி ?? இலக்கத்திலுள்ள அச்சகப்'ரிசில் 30.04.1990ல் அச்சிட்டு வெளியிடப்பெற்ற